

# காலக் கீறல்கள்

கனகசபை தேவகடாட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் கீறல்கள்

L. KUGAN
72. 2nd LANE
ANANDAPURI
TRINCO

## கனகசபை தேவகடாட்சம்

**பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக**

வெளியீடு:

**செல்வமாணிக்கம் பிரபாகரன்**
(இலங்கை நிருவாக சேவை)
உதவிச் செயலாளர்
பிரதம செயலாளர் பணிமனை
வடக்கு–கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடி பதிக்கு முன்....

விழிப்புலனற்றோருக்கு விருப்புடன் தாமாற்றும்
அறிவில்லா சேவைகண்டு ஆனந்தம் கொள்கிறோம்
தொடரட்டும் உம்பணி
தொடங்கட்டும் பிறர்பணி
என்றே வாழ்த்தும்

திருமதி வி. ஞானவேல்
நியூ அஜந்தா ஜுவலரி

கரமான தங்க நகைகளை வாடிக்கையாளர்களின்
விருப்பிற்கமைய வழங்குவதில் திருப்தி கொள்பவர்கள்

நியூ அஜந்தா ஜுவலரி

# நியூ அஜந்தா ஜுவலரி

இல. 159 \ B2, ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.

தொ. பே. எண்: 22512

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
COLOMBO - 6.

PHONE { ASHRAMA: 588253
CULTURAL CENTRE:

22.5.96

## வாழ்த்துரை

'மனித சேவையே மாதவன் சேவை' என்பது சுவாமி விவேகானந்தரின் தாரக மந்திரமாகும். அதிலும், குறிப்பாக, நலிவுற்றோருக்காகச் செய்யப்படும் சேவை உயர்ந்த வழிபாடாக அமைகிறது.

திருகோணமலையைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் திரு கனகசபை தேவகடாட்சம் என்பவர், தனது இலக்கிய ஆக்கங்களைத் தொகுத்து புத்தகமாக வெளியிட்டு, அதனின்றும் வரக்கூடிய வருமானத்தை பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டிற்காக வழங்க முன்வந்துள்ளார் என்பதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். அவரது நோக்கம் உன்னதமானது. இதை அனைவரும் வரவேற்பர் என நம்புகிறோம்.

திரு தேவகடாட்சம் அவர்களது நோக்கம் நன்கு நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவருக்கு எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

சுவாமி ஆத்மகணானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகள்
நூல் உருப்பெற
வேண்டுமென
மிகுந்த அவா
கொண்டிருந்த கலை
இலக்கிய
முற்போக்குவாதியான
அமரர் சி. பற்குணம்
அவர்களின் மூன்றாம்
மாத நினைவாய்
இந்நூல்
வெளிவருகிறது.

**செல்லமாணிக்கம் பிரபாகரன்**
(இலங்கை நிருவாக சேவை)
உதவிச் செயலாளர்
பிரதம செயலாளர் பணிமனை
வட-கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு!

**அமரர் ஆசிரிய மணி எ. மு. கனகசபை -**

என் தந்தைக்காய்!

**அமரர் பண்டிதர் வ. நீக்கொலாஸ் -**

கல்வி தந்த ஆசானுக்காய்!

**மர்ஹூம் ஏ. எல். அப்துல் மஜீத் -**
(முன்னாள் அமைச்சர்) சீரிய வழிகாட்டிக்காய்!

**அமரர் வி. வசந்தகுமார் -**

சிறப்பான தோழமைக்காய்!

**அமரர் சி. பற்குணம் -**

மனித மேம்பாட்டு நேயத்திற்காய்!

**என் சமர்ப்பணம்!**

**கனகசபை தேவகடாட்சம்**
(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயில் முகப்பில் ஓர் படிகம்

"**கா**லக்கீறல்கள்" ஆசிரியர் தேவகடாட்சத்தோடான முதற் சந்திப்பு அவர் சிறுகதைத்தொகுதியில் தொட்டுக்காட்டும் நமது நாட்டின் தற்கால சூழல் என்பதின் பிரதிபலிப்பாய் ஏற்பட்டதொன்றாகும்.

முதற் சந்திப்பில் என்னைப் பார்வையற்றவன் என அடையாளம் காணாதவராயும் பின் அதனை அறிந்து அனுதாபியாகி, தொடர்ந்த தொடர்பில் ஆதரவாளனாகி – பின் விழிப்புலனற்றோர் கல்வி நிதிக்காக கொடி வாரம் நடாத்திய போது அதற்கு எம்முடன் முன்நின்று உழைத்து அதன் வெளிப்பாடாக இந்நூலை பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக பெரும் முயற்சியின் பின் வெளிக்கொணர்ந்துள்ளார்.

பார்வையற்றோர் கல்வி தொடர்பாகவும் இவ்விடத்தில் சிறு குறிப்பு ஒன்றினை தரலாம் என எண்ணுகின்றேன். சமூகத்தில் பலரின் எண்ணம் ஒருவருக்கு பார்வையில்லை அல்லது குறைபாடு இருப்பின் அவரால் எதுவுமே செய்யமுடியாது என்பதுதான். விழிப்புலன் அற்றவர்கள் படிப்பதற்கு எழுத்து முறையான (பிரையில்) குற்றெழுத்து முறை இருக்கின்றது. இதனைப்பயன்படுத்தி அவர்கள் சாதாரணமான மாணவர்கள் போல் கல்வி கற்று, பட்டம் பெற்று, உயர் பதவிகளில் அமர்வதற்கும், மதிப்புமிக்க ஆசிரியர் தொழில் செய்வதற்கும், வக்கீல்கள், கலைத்துறையாளர்களாக தொழில் ரீதியான தகுதிகளைப் பெறுவதற்கும் வழிவகுக்கின்றது.

மேலும் கைத்தொழில் துறையிலும் அவர்களுக்கு பயிற்சியளித்து வாழ்வில் முன்னேற கல்வி அவர்களுக்கு துணை புரிகின்றது.

இத்தகைய கல்வியினை விழிப்புலனற்றோருக்கான பாடசாலைகளும் சாதாரண பாடசாலைகளில் ஒரு முகப்படுத்தப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. அத்தகைய ஓர் விழிப்புலனற்றோர் நிறுவனத்திற்கே இந்நூல் விற்பனையால் வரும் முழுப்பணமும் வழங்கப்படவுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உன்னத உண்மையையும் இவ்விடத்தில் வெளியீட்டாளன் என்ற வகையில் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தகைய உயர் பணிக்கு ஆதரவு தந்து அனுசரணையாக இருந்த இந்நூலாசிரியர் தேவகடாட்சத்திற்கும், மனமுவந்து ஆசியுரை வழங்கிய ஆத்மகனாநந்த மகராஜ் சுவாமிகள் அவர்களுக்கும், இந்நூலை அச்சேற்றி வெளிக்கொணர நிதிப்பங்களிப்பு வழங்கிய திருமதி. வி. ஞானவேல் (அஜந்தா நகைமாளிகை) திரு சி. சிற்றம்பலம் (பிரகாஷ் நகைமாளிகை) அவர்களுக்கும், திரு காத்தமுத்து ஆறுமுகம் (டொலர் ஏஜென்சி) அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இவ்வாறான ஒரு நூல் வெளிவர வேண்டுமென முதலில் ஆலோசனையை தந்து ஊக்குவித்த அமரர் சி. பற்குணம், திரு நவசோதிராஜா, திரு க. கோணேஸ்வரன் ஆகியோருக்கும் நன்றி கூறுவதுடன், அழகிய அர்த்தமுள்ள அட்டைப்படத்தை வரைந்துதவிய ஓவியர் திரு. எஸ். சிவதாசன் ஆகியோருக்கும், நூலுருவிற்கு உதவிய செல்வி. கீதாஞ்சலி ஸ்ரீநிவாசன், திரு. முத்துலிங்கம் சந்திரசேகரம், திருமதி லலிதானந்தசிவம் இராஜேஸ்வரி, செல்வி கமலவதனி காங்கேசன், திரு. ஜா. விஜயராஜ் ஆகியோருக்கும், சங்கமம் பதிப்பகத்தினருக்கும், வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்த உவர்மலை–கிராமோதைய சபைக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனிய வாசகர்களே, இனி வலம் வரும் பாதையில் இந்நூலாசிரியரின் கருத்துக்களை வாயிலில் நுழையுமுன் காண்போம்.

வெளியீட்டாளர்:

**செ. பிரபாகரன்** (இலங்கை நிருவாக சேவை)
உதவிச் செயலாளர்
பிரதம செயலாளர் பணிமனை
வடக்கு–கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழையுமுன்...

மனம் விட்டுச் சொல்கிறேன்!

எழுத்துலகில் நான் பிரவேசித்தது ஒருவிபத்து!

சிறுகதை எழுத்தாளனாக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதும் இருந்ததில்லை.

அந்தளவிற்கு அனுபவமும் இல்லை. ஆனால்.... எப்படி?

**எழுத்துலக முதல் பிரவேசமும், பிரசவமும்!**

என் சொந்த மண் மல்லிகைத்தீவு. தொடர்ச்சியாய் தொடர்ந்த வன்செயல்களையும், அதன் அனர்த்தங்களையும் முழுமையாக அனுபவித்தவன் நான். இவைகளுடன் குடும்ப சுமையையும் சுமந்து கொண்டு திருகோணமலை நகருக்கு 1990 ஆம் ஆண்டு வந்தேன்.

அவ்வேளைதான் துருப்பிடித்திருந்த நட்புகள் துடைக்கப்பட்டன– மீள் இணைந்தன. முத்துக்குமரன் ஆலயத்துக்கான சிவநெறி சிறப்பு மலர் (1992 ஆம் ஆண்டு) திருகோணமலை இந்து இளைஞர் பேரவையால் வெளியிடப்பட்டது.

அவ்வாலய சூழலில் நான் பணியாற்றியமையால் அவ்விடத்து அயலில் வாழும் என் அருமை நண்பர் திரு. செ. நவசோதிராசாவால் பேரவையின் வேண்டுகோளுக்கு அமைய சிவநெறி மலருக்கு கட்டுரை தரும்படி பணிக்கப்பட்டேன். 'எனது ஆக்கம் தரமாக அமையாது' என்று பலமுறை தடுத்துக்கூறியும் அதற்கு செவிசாயாத நண்பர் "கட்டுரை தந்தாக வேண்டும்" என அடம் பிடித்தார். உரிமையுடன் கடிந்தும் கொண்டார்.

'திருஞானசம்பந்தர் வீதியிலே..... திருமுருக தரிசனம்' என்ற ஆக்கம் வெளியானது. அதுவே அச்சில் முதல் பிரசவம் ஆன என் ஆக்கம்.

வாழ்வில் மறக்கமுடியாத சந்தோஷநாள்!

இறைவனுக்கே அந்த புகழ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நண்பன் 'நவத்திற்கு' நன்றியும், கடமையும் பட்டுள்ளேன்.

அதே போன்று திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினருக்கும்! எழுத்துலகில் என் முதல் காலடியினைப் பதிக்கச் செய்தவர்கள்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது'

## நானும் சிறுகதையும்.

கால நகர்வின் அனுபவங்களும், உட்புறத்தாக்கங்களும் என்னை நெகிழ வைத்தது. நெகிழ்ச்சியின் வெளிப்பாடுகளை வெளிக்கொணர ஓர் ஊடகம் தேவைப்பட்டது.

அவற்றை சிறுகதைகள் ஆக்கினால் எப்படி?

அப்போதுதான் என் நண்பர் க. கோணேஸ்வரனை அணுகி சிறுகதைக்கான வரைவிலக்கணம் யாதென வேண்டினேன். அவரின் பதில் இன்னமும் என் இதயத்தில் வாழ்கிறது.

'இதற்கென தனியான வரைவிலக்கணங்கள் இல்லை. உள்ளார்ந்த வெளிப்பாடுகளை புரியும்படி எப்படி எழுதுகிறாயோ அதுவே உன்பாணி. இதற்காக எவர் பாணியையும் பின்பற்றாதே!'

ஆகவே, அது

என் இதயத்தில் துணிவும்... உத்வேகமும் ஏற்பட ஏதுவாய் அமைந்தது. 1995ம் ஆண்டு ஆடி 23ல் 'மதில் மேல்' என்ற என் முதல் சிறுகதை 'தினமுரசு' பத்திரிகையில் பிரசுரமானது. மகிழ்வின் உச்சம் அன்று! தொடர்ந்து என்போன்ற புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துவரும் தினமுரசு பத்திரிகையை பாராட்டாமல் இருக்வொண்ணா.

அடுத்ததாய் மேடையிட்ட 'சங்கமம்' பத்திரிகையை நினைவில் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால காயங்களை காட்டும் கண்ணாடியாய் என் கதைகள் தொடர்ந்தன! 'கீறல்கள்' அடையாளம் காணப்பட்டன. காலங்கள் எம்மைவிட்டு நடப்பதில்லை. அந்த சுவடுகளின் வடுக்கள் யதார்த்தமானவை- அவைதான் இந்த என் 'சிருஷ்டிப்புகள்.

## வாசகர்களுடன் நான்....

கதைகள் வெளி வந்ததும் விமர்சனங்களும், தொடர்ந்து வரும்... அவ் விமர்சகர்களுள் உரிமையாக விமர்சிப்பவர் என் உடன்பிறவா சகோதரி. திருமதி. கிருஷ்ண வத்சலா பத்மநாதன். "டேய் இப்படி எழுதாதே. இப்போதைய நிலையில் சிக்கலில் தள்ளிவிடும். தொடர்ந்து எழுது. ஆனால் மாற்றி எழுது"

எந்நிலையிலும் அது என்னால் முடியவில்லை. காதலிலோ, போரிலோ, என் கதைகளை தள்ள இஷ்டமில்லை. திசைமாறும் எண்ணமும் இல்லை. அதனால் எனக்கென ஒரு பாணியை அமைத்துத் தொடர்ந்தேன். கதைகள் பல உருப்பெற்றன. பிரசுரமாயின.

இக்கதைகள் நூல் உருப்பெற வேண்டுமென எண்ணிய வாசகர்கள் பலர். இவர்களிற் சிலர்:

முற்போக்கு வாதியான அமரர் சி. பற்குணம், நண்பர்கள் திருமலை சுந்தா, கெ.ஜ.தர்மராஜா, வே. கனகசபை, எம்.எச். பஸீர், - மறவற்க என்றும்.

# நோக்கம்

நூலாக்கும் விடயம் சார்பாக எனக்கு அனுபவங்கள் எதுவும் இல்லை. ஆனால் பயனுள்ள காரியத்திற்கு பயன்பட வேண்டும். இது என் நோக்கமாய் இருந்தது. ஆதலால் என் மதிப்பிற்குரிய திருவாளர் செ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன் (உதவிச் செயலாளர், பிரதம செயலாளர் பணிமனை) ஆலோசனை நோக்குதற் பொருட்டு அணுகினேன். அதன் பெறுபேறுதான் பார்வையற்றோருக்கான நிதி உதவி நூலாக இது உருவெடுத்துள்ளது. இமயம் போல் உரமேறிய அத் தன்னம்பிக்கையாளனுக்கு என் இதய நன்றிகள்...

## இறுதியாக உங்களுடன்

**அன்பான வாசகர்களே.**

நான் சிறுகதை எழுத்தாளனாக மிளிர வேண்டுமென மார்பு தட்டிக் கொள்ளவில்லை. இக்கதைகள் தனியார் வியாபார நோக்கத்திற்காகவும், அச்சேறவில்லை. எம் சமூக மத்தியில் பார்வையற்று வாழும் மாணவர்களின் கல்வி வளத்திற்காக!

அதனால் கூறுகிறேன்.

தரமான சிறுகதை எழுத்தாளர்களோடு ஒப்பிடுகையில் நான் மடு. ஒரு கைபிடியளவு களிமண் கொண்டு ஓர் சிறு குடில் அமைத்துள்ளேன். இதை மாளிகையோடு ஒப்பு நோக்காதீர். பிழைகள் பல தோன்றலாம். உரிமையுடன் கேட்கிறேன். பொறுத்தாக வேண்டும். மீண்டும் கூறுகிறேன்...

தனியார் வியாபார நோக்குடன் இந்நூல் விற்பனைக்கு விடப்படவில்லை. விழிப்புலனற்ற மாணவர்களின் கல்விக்காக என்பதை மட்டும் மனதில் கொள்ள வேண்டும்.

இனிவாருங்கள்.... உள்ளே நுழைவோம்.

என்றும் நன்றியுடன்

**கனகசபை தேவகடாட்சம்**

மல்லிகைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீறல்களின் கீற்றுக்கள்....


| | | |
|---|---|---|
| 01. | தெரி(ந்த)யாத முகம் (தினமுரசு) | 14 |
| 02. | கானல் | 17 |
| 03. | மையமில்லா வட்டங்கள் | 19 |
| 04. | சுதந்திரங்கள் மரணிக்கின்றன-(சங்கமம்) | 22 |
| 05. | அது போதும்-(தினமுரசு) | 25 |
| 06. | நாக்கியா-(தினமுரசு) | 28 |
| 07. | ஒரு பயணம் முடிகின்றது | 30 |
| 08. | விட்டில் பூச்சி (தினமுரசு) | 34 |
| 09. | அஞ்சலி | 36 |
| 10. | செல்ல வைத்தவர்கள் (தினமுரசு) | 39 |
| 11. | உடையார் உடையார் | 41 |
| 12. | நல்லெண்ணெய் | 44 |
| 13. | காலம் ஒருநாள் | 46 |
| 14 | மதில் மேல் (தினமுரசு) | 49 |
| 15. | கொடுப்பனவு | 52 |
| 16. | தணல் | 54 |
| 17. | நத்தார் - பொங்கல் | 57 |
| 18. | குருமாருக்கு | 59 |
| 19. | என்று தணியும் இந்த... | 61 |
| 20. | டாக்ரர் எங்கே (தினமுரசு) | 64 |
| 21. | பட்ஜெட் (தினமுரசு) | 67 |
| 22. | பாதை தெரியாத பயணங்கள் | 70 |
| 23. | தகுதி (தினமுரசு) | 74 |
| 24. | பூட்டு (தினமுரசு) | 76 |
| 25. | ஜீரணம் சங்கமம் | 78 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்க அவர்தம் இலக்கியப்பணி

பண்படுத்தப்பட்ட மனித உணர்வின் ஒழுங்கமைக்கப்பட்ட மொழியியல் வெளிப்பாடே இலக்கியமென பெயர்பெறுகிறது. வ.வே.சு ஐயர் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்டு, மணிக்கொடியாளர்களால் தாலாட்டப்பட்டு, கு.ப.ரா, புதுமைப்பித்தன் ஆகியோரால் உலக தரத்துக்கு முடிசூட்டப்பட்ட இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதைத்துறை நவீன உலகில் மக்கள் மனதை கவர்ந்ததாயும் பல்வேறு பட்ட பரிணாம மாற்றங்களை காலத்துக்கு காலம் பெற்றதாயும் வேகமாக முன்னேறி வருகின்றது.

சிறுகதை என்பது இன்னதுதான் எனப் பலர் அறுதியிட்டுக் சொல்ல முனைந்த போதிலும், அக்கூற்றுக்கள் சிறுகதைகளை பூரணமாக வரையறுக்கவில்லை. இது குறைபாடு அன்று. வளர்ந்து வரும் துறையொன்றை வரைவிலக்கணப்படுத்த முடியாது என்பதற்கான எடுத்துக்காட்டு.

மேம்போக்காக நோக்கும் இடத்து கதாசிரியனொருவன் சமூகத்துக்கு தேவையென தான் கருதியதை குறிப்பிட்ட கதாபாத்திரங்களை வளைத்தமையும், ஓரிரு சம்பங்கள் ஊடாகவோ அல்லது அக்கதா பாத்திரங்களின் மனோநிலையூடாகவோ நல்ல மொழிநடையில் வெற்றிகரமாக வெளிப்படுத்தும் வழியே சிறுகதை எனலாம்.

இத்தகைய சிறுகதைகள் சிறப்பாக அமைவதும், அமையாது விடுதலும் கதாசிரியரின் மொழியாட்சி, சொல்லாட்சி, கற்பனைத்திறன் என்பவற்றை பொறுத்ததே. திரு. **கனகசபை தேவகடாட்சம்** இந்த வகையில் வெற்றி பெற்றுள்ளாரா, இல்லையா என்பதை வாசகர்கள் தாம் தீர்மானிக்க வேண்டும்.

வாசகர் தீர்மானத்துடன் நானும் சேர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அவர் ஓர் ஆரம்ப எழுத்தாளர். ஆர்வமுள்ள – வளரத்துடிக்கும் – எழுத்தாளர். நம்பிக்கையுள்ள எழுத்தாளர். நன்னோக்கத்துக்காய் இந்நூல் விற்பனைக்குட்படுத்தப்படவிருக்கிறது என்ற சிறிய தகவுரைகளுடன்...

அன்பன்<br>
**க. கோணேஸ்வரன்**<br>
திருகோணமலை<br>
22. 05. 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரி(யாத)ந்த முகம்

தலைவர் சுப்பிரமணியம் அமரத்துவம் அடைந்ததன் நினைவாக கட்டப்பட்ட அந்த பஸ் தரிப்பு நிலையத்தில் கொழும்பு பஸ்சிற்காக காத்து நிற்கிறேன். வழக்கத்திற்கு மாறாகப் பயணிகள் தொகை குறைவாக இருந்தது. கைக் கடிகாரத்தை பார்க்கிறேன். இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் செல்லும், கொழும்பு பஸ் வருவதற்கு! மனதுக்குள் அலுத்துக் கொள்கிறேன்.

சற்று மெதுவாக நிமிர்ந்து நோக்குகிறேன், தலைவர் சுப்பிரமணியத்தின் நினைவாக கட்டிய பஸ் தரிப்பு நிலையத்தை. அக்காலங்களில் அரசியல் மேடைகளில் கலக்கியவர் அவர்! தனக்கென்று எதுவுமே சேமிக்காது சுய நலமிக்க அரசியல்வாதிகளுக்காக அயராது உழைத்த அப்பாவி மனிதர்! சத்தியாக்கிரக காலம் தொடங்கி இன்று வரை அரச அடிமைத்தனங்களுக்கு எதிராக முகம் கொடுத்து நோய்வாய்ப்பட்டு, அமரத்துவம் அடைந்தவர்! அந்த துணிச்சல் மிக்க தியாகியை எண்ணியவாறு திரும்புகிறேன்.

தெரு அல்லோல, கல்லோலப் படுகிறது. 'இளசு, கிழடு' என்று பேதமின்றி பரபரக்க ஓடுகிறார்கள். முன்னால் ஒரு வெள்ளை 'வேன்' அதன் பின்னால் இரண்டு வாகனங்கள். அதனுள் ஒரு முக்காடு இட்ட முகமூடி மனித உருவம். ஆள் பிடிக்கும் படலம் நடந்து கொண்டிருக்கிறது.

முக மூடியின் ஆணையின் படி தெருவில் நின்றவர்கள் பிடிக்கப்பட்டு கதறக் கதற வாகனத்தில் பலவந்தமாக ஏற்றப்படுகிறார்கள். எனக்கு இது அச்சத்தை தந்தாலும், கொழும்பு செல்லும் பயணி என்று சொல்லி தப்பி விடலாம் என்ற தென்பு இருந்தது. இப்போது நான் நிற்கும் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் முகமூடி வாகனம் வருகிறது. இதயம் திக் - திக் - என அடிக்கும் ஒலி என் காதுகளுக்கு கேட்கிறது. என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வாகனம்.... முகமூடி உருவம் என்னைக் கண்டு தலையை ஆட்டி ஆணையிட்டது. மறுகணம் என்னைச் சுற்றி பலர். பலவந்தமாக ஏற்றுகின்றார்கள். கொழும்பு செல்லும் பயணத்தைப் பற்றிக் கூற அவகாசமில்லை.

அநியாயம் சொல்லக் கூடாது – வஞ்சகம் இல்லாத அடி, உதையுடன் கூடிய மரியாதைகளுடன் ஏற்றப்பட்டேன்.

அடுத்ததாக பஸ் தரிப்பு நிலையத்தில் நின்ற ஏனையவர்களை முகமூடி நோக்குகிறது. ஆகா ... இன்னுமொரு கொழும்பு பயணியை காட்டியது. அதே மரியாதையுடன் வாய் திறந்து எதுவும் கூற அவகாசமின்றி வாகனத்தில் ஏற்றி தள்ளப்படுகிறார். வாகனம் நகர்கிறது.

இப்போது பேசுவதற்கு ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இறுதியாக ஏற்றப்பட்ட அந்த கொழும்பு பயணி சகோதர மொழியில் காரசாரமாக மொழிந்தவாறு தனது அடையாள அட்டையை விரித்து நீட்டுகிறார். சிவப்பு இலச்சினையிட்ட அடையாள அட்டை. புரிந்து கொண்டேன். அவரும் ஒரு பாதுகாப்பு படையை சேர்ந்தவர். விடுமுறையில் வீடு செல்வதற்கு சிவில் உடுப்பில் நின்றிருந்திருக்கிறார். வாகனத்தில் இருந்தவர்களும், முக மூடியும் மன்னிப்புக் கோரி அவரை இறக்கி விடுகிறார்கள். ஆனாலும் அந்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு ஆத்திரம் தீரவில்லை என்பது நன்றாக விளங்கியது.

இப்போது வாகனம் மீண்டும் தேடல் பயணத்தை ஆரம்பித்தது. ஒரு மணித்தியாலம் சென்றிருக்கும். நான் அடைக்கப்பட்டிருந்த முகமூடி வாகனத்தை முன்னால் மறித்து நின்றது இன்னொரு வாகனம். நன்றாக உற்று நோக்குகிறேன். என்னோடு ஏற்றப்பட்டு விடுதலை செய்யப்பட்ட அந்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் தலைமையில் பத்து பதினைந்து பேர். நான் இருந்த வாகனத்திற்குள் ஏறினார்கள்.

அவர்களும் ஒரு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது சொல்லாமல் விளங்கியது. மறு கதை இல்லை. கைது செய்தவர்களுக்கும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமூடிக்கும் தூள் கிளம்பியது. 'குரக்கன் அரைக்கும்' சத்தம் கேட்டது. பலமான அடிகள். "எங்கள் கப்டனுக்கா நீ தலையை ஆட்டினாய்?" என்று சகோதர மொழியில் பேசிய ஒருவர் அந்த முகமூடியின் திரைச் சீலையை கிழித்து அடித்தார். எனக்கு ஒரே அதிர்ச்சி! அந்த முகமூடி நன்கு தெரிந்த முகம்! தெரியாத முகம் போல் காட்டிக் கொண்டேன் – தொடர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசையில்.

(தினமுரசு டிசம்பர் 17.1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானல்

என்னவாய் இருந்தாலும் மாலை நேரக் குளிப்பு இருக்குதே. உடலுக்கும், உள்ளத்துக்கும் புது உற்சாகத்தை தந்தே தீரும் என்று எண்ணியவாறு உடல் ஈரத்தை துடைத்துக் கொண்டு ஆயாசமாக அந்த சாய்வு நாற்காலியில் சாய்கிறேன்.

பக்கத்து மேசையில் இருந்த புத்தகத்தை கையில் எடுக்கிறேன். பண்டிதர். வ.நீக்கொலஸ் அவர்களால் எழுதிய நான் கண்ட பாரதி பாரதியின் புரட்சியில் எனக்கு பக்தி. அதேபோல் நூலாசிரியரிலும். எனக்குப் படிப்பித்த ஆசான் அல்லவா? மெதுவாகப் புத்தகத்தை தட்டுகிறேன். கண்கள் நிலைக்குத்தி நிற்கிறது. தனியொரு 'மனிதனுக்கு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!' பாரதியின் புரட்சியான கருத்துக்கு ஆசிரியரின் புதுமையான விளக்கம். 'ஜெகத்தினை அழித்திடுவோம்' 'காடுகளை அழித்திடுவோம்' ஜெகத்திற்கு காடு என்னும் பொருள் உண்டு.

ஆசிரியர் பண்டிதர் மேல் மதிப்பு அதிகரிக்கின்றது. புத்தகத்தை விரித்தவாறு மார்பின் மேல் கண்ணை மூடி மானசீக மரியாதை செலுத்துகிறேன் நூல் ஆசிரியருக்கு.

"டேய்! என்னடா புத்தகத்தை வைச்சிட்டு நித்திரை கொள்ளுறாயா? கண்ணைத் திறக்கிறேன். முன்னால் கோபாலன் நின்று கொண்டிருந்தான். மெதுவாக எழுந்து கதிரை எடுத்துப் போடுகிறேன். அவன் அமர்கிறான். கோபாலன் தொடர்கிறான். "இஞ்சேர் இன்னைக்கு ரெண்டு பேரும் படம் ஒண்டு பாப்பம். 'நெல்சன்' தியேட்டரில் ஓடுது. புரட்சிப் படமாம்.... வெளிக்கிடு ம்...ம்...." என்னை அறியாமல் புன்னகைக்கிறேன் சலனத்தை அடக்கியது மௌனம். நான் கேட்டுட்டு இருக்கிறேன்..... நீ என்ன பேசாம இருக்கிறாய்" சற்று கோபமும் கலந்து இருந்தது கோபாலனின் குரலில். 'நான் எதைச் சொன்னாலும் நீ ஏத்துக்கமாட்டாய். நான் படத்திற்கு வரமாட்டேன்" திடமாக மறுக்கிறேன். "சரி உன் நண்பன் நான். ஏனெண்டு காரணத்தையாவது சொல்லு. ஏற்றுக் கொள்வது பற்றி பிறகு யோசிப்பம்." கோபாலன் உரிமையுடன் நெருங்குகிறான். "டேய் கோபாலா கவனமாகக் கேள்" என்று என் வெளிப்பாட்டை கொட்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளாகத் துரத்தப்பட்டு குடும்பத்துடன் இந்திய தமிழ் நாட்டு மண்டபம் முகாமில் வாழ்ந்த காலங்கள். அப்போதெல்லாம் நடிகர்கள் தயாரிப்பாளர்கள் படையெடுத்து வந்து நலன் விசாரிப்பார்கள். அரசியல் இலாப நோக்கமாயிருக்கும். அல்லது எம் வாழ்க்கை அனுபவங்களை வைத்து திரைப்படம் எடுத்து சம்பாதிப்பதாய் இருக்கும். முதல் நாள் பட வெளியீட்டில் எம்மவர்களோடு பார்ப்பேன். அப்போதுதான் எமது மண்டப அகதி முகாம் பொறுப்பாளர் கூறியது என்னை திசை திருப்பியது. "ஏய்... உங்கள் ஊரில நடக்கிற உண்மை வீரச் சம்பவங்களை வைத்து படமாக்கி, போலி வீரத்தைக் காட்டி உங்க கிட்ட பணம் பறிக்கிற கூட்டம் அய்யா இவங்க. உங்களாலதான் உழைக்கிறவங்க. உங்களுக்கு ஒரு உதவியும் பண்ண மாட்டானுங்க. படத்தில மட்டும் புரட்சியாய் பேசி நடிப்பான்க. செயலில் ஒன்றுமில்லை! வெட்கங் கெட்ட ஆட்களையா நீங்க."

அவர் கூறிய அத்தனையும் உண்மையாகப்பட்டது எனக்கு. "டேய் கோபாலா, சொல்லுபாப்பம்-நம்மட பிரச்சினைகளை மையமாக வைக்காம ஒரு படம் இருக்கா? சொல்லு. நம்ம நாட்டு பிரச்சினைகளிலே சிறு பங்கும் எடுக்காம அதே படமாக்குவாங்கள். எங்களின் குருதியால் ஏற்படும் புனலில் நீராடி சுகம் காணுவாங்க. கோபாலா நீ போ படத்துக்கு. எனக்கு நேரமும் இல்ல. பொறுமையும் இல்ல!" மிகுந்த ஆக்ரோசத்துடன் பேசி முடிக்கிறேன்.

மெதுவாக எழும்பிச் செல்கிறான் கோபாலன். "படத்திற்கா போகிறாய்" என்கிறேன். திரும்பிப் பார்க்கிறான். பதில் எதுவுமே இல்லை. மௌனமாக அகல்கின்றான். அவன் கண்கள் சிவப்பேறியிருந்தன, மற்றவர்களுக்கு புரிந்ததோ என்னவோ, என் உள்ளார்ந்த எண்ணங்களை கொட்டிவிட்டேன். அதில் திருப்தி. மீண்டும் நான் கண்ட பாரதி புத்தகத்தை புரட்டுகிறேன்.

"மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பரோ
கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மையமில்லா வட்டங்கள்

'டாண்.... டாண்... டாண்' என முத்துக்குமாரசுவாமி ஆலய மணியோசை அமைதியாக ஒலித்தது. காலை இருள் மெதுவாக கலைந்து கொண்டிருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை முருக தரிசனத்துக்காய் நான் முந்தி நீ முந்தி என பக்தர்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டிருந்தது. ஆண்டவனை வசப்படுத்த பஜனைப் பாடல்களும், அர்ச்சனை ஒலிகளும் ஆலயத்தினுள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இவைகளின் இடையே ஓர் கீதம். அதுதான் ஒற்றுமை கீதம்.

ஆலய வெளிவாசல் வீதியிலே ஓர் குழுவினரால் இசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஐயா, அம்மா..... பிச்சை...... தர்மம் போடுங்கம்மா" இந்த கீதத்தை எவரும் பொருட்படுத்தவே இல்லை. ஆண்டவனுக்கே கேட்க சகிக்க வில்லையாம். மனிதர்களுக்கு எங்கே? ஆம்; பிச்சைக்காரர்கள் எம் நாட்டின் சொத்துக்கள். சொத்துக்களை இழந்தவர்கள் இவர்கள்.

ஆதியிலும் யாசகர்கள் அல்ல.

சாதியிலும் யாசகர்கள் அல்ல.

பாதியிலே யாசகர்கள் ஆனவர்கள்; ஆக்கப்பட்டவர்கள், காலங்களின் கோலங்களால்.

பக்தர்கள் கூட்டம் போவதும் வருவதுமாக பெருகிக் கொண்டிருந்தது. "சறார்" என்று புழுதியைக் கிளப்பியவாறு ஆலய வாசலில் நின்றது கார் ஒன்று. பெரும் புள்ளி அவர். கொழும்பிலே நகைக்கடை. இன்றைய காலைப் பூசையும் அவருடையது. அதாவது சிவராமனுடையது. இதனைக் கண்டதும் 'ஒற்றுமைக் கீதம்' சற்றுப் பலமாக ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா...... அம்மா.... பிச்சை" அதில் ஒரு பெண் குரல் மட்டும் மெதுவாக ஒலித்தது; மௌனித்தது. ஆனால் அவள் நினைவுகள் மட்டும் என்றுமே மௌனிக்காது, உயிர் கொண்டு நகர்ந்தது.

மணியம் போடியார் அந்த கிராம வட்டாரத்திலேயே பெரும் புள்ளி. வயல் நிலங்களுக்கும், தோட்டங்களுக்கும் சொந்தக்காரர். அவரின் மூத்த பிள்ளை பரமேஸ்வரி அடக்கமான அழகான பெண். முற்றத்தில் நெல் காயவைக்கும் போது மட்டும் தான் அவளை வெளியில் காணமுடியும். வளமான வாழ்க்கையை அமைப்பதற்காய் 'பட்டணத்துப் பையன்கள்', கிராமத்துக்கு படையெடுக்கும் காலம் அது. 'எண்ட மாப்பிள்ளை ரவுண்' என்று கூறுவதிலும் இக்கிராமத்து அம்மாச்சிமார்களுக்கு தனி பெருமையும் கூட. அதில் போடியார் மணியமும் சிக்குண்டவர் தான்.

பட்டணத்துப் பையன் சிவராமன் நெல் வியாபாரத்துக்கு வந்த வேளை போடியார் மணியம் சந்தித்தார். நகரத்து நாகரீகத்தை தவிர பெரிதாக சிவராமனிடம் எதுவும் இல்லை. பட்டணத்துப் பையன். வெகுவாக பிடித்திருந்தது அவருக்கு! பரமேஸ்வரியைவிட மணியத்தாருக்கு விருப்பம் அதிகம்.

சிவராமன், பரமேஸ்வரி–திருமணப் பேச்சு ஆரம்பம்.

கொழுத்த இடம்! சிவராமனின் பெற்றோருக்கு சம்மதம்.

ஆவணியில் நல்ல நாள்– இன்னும் 4 மாதங்கள் உண்டு. திருமணத்திற்கு.!

இப்படியான கலவரமும், வன்முறைகளும் வெடிக்குமென்றோ அதில் மணியம் போடியார் மடிவார் என்றோ எவரும் எண்ணவில்லை. சிவராமன்–பரமேஸ்வரி திருமணம் அத்துடன் ஸ்தம்பித்து நின்று விட்டது. இப்போது தனிமரமான பரமேஸ்வரிக்கு ஒரு கொடிமரம் தேவையானது. சொர்க்கத்தில் நிச்சயமாகும் திருமணம் அகதிகள் முகாமில் நடந்தேறியது. சொந்த ஊர்ப்பையன்தான். தூரத்து நீர் ஆபத்துக்குதவாது. பரமேஸ்வரி திருமணமாகி ஒரு வருடம் கைக்குழந்தை ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தது சோகம்! எமக்கு என்றுமே முடிவில்லாததுதானே. விறகிற்காக காடு சென்ற பரமேஸ்வரியின் கணவன் சுடப்பட்டு இறந்தான். சோகத்தின் உச்சத்தில் நின்றாள் பரமேஸ்வரி.

நடந்த ஊரில் தவழக்கூடாது. பரமேஸ்வரி தன் கைக்குழந்தையுடன் வாழ்க்கை வெறுத்த நிலையில்.... தனது சொந்த ஊரைவிட்டு... கால்கள் போன திசையிலே நடந்தாள்.

ஐயா.... அம்மா.... பிச்சை என்ற தனது குழுவினரின் ஒற்றுமை கீதத்தில் அந்த மௌனித்த நினைவுகள்..... மீண்டது பரமேஸ்வரிக்கு.

சில்லறைகளை இட்டுக் கொண்டிருந்தான் சிவராமன். அந்த நகைக்கடை முதலாளி.

முகம் கவிழ்ந்த படியே பரமேஸ்வரியின் கரம் நீண்டது சிவராமனின் சில்லறை பிச்சைக்காய். சற்று குனிந்து நோக்கினான் சிவராமன். கண்ட முகம்.... ஆனால் இப்போது காணக்கூடாத முகம்! கையால் இறுக பொத்திய படி போட்டான் பரமேஸ்வரியின் மடியில்..... மடியில் இருந்த பிள்ளை அதைப்பிரித்து பார்த்தது. ஐநூறு ரூபாதான். பரமேஸ்வரி நிமிர்ந்தாள். வேகமாக பறந்தது கார். விதியை நொந்து கொண்டாள். தொடர்ந்தது அந்த 'ஒற்றுமை கீதம்'. அதோடு இணைந்தது அவளின் சின்னம் சிறிய மகள் குரலும்!

# சுதந்திரங்கள் மரணிக்கின்றது

அந்த முரசின் நாதம் மேலும் மேலும் துக்கத்தை அதிகரித்த வண்ணமே இருந்தது. வருவோர், போவோரின் கண்கள் குளமாகியிருந்தன.

வெள்ளை வேட்டியும், சால்வையும் அணிந்து மிக அழகாக சுப்பிரமணியத்தின் பூதவுடல் பெட்டியினுள் வெண்தாமரையாய் வைக்கப்பட்டிருந்தது.

தலைவர் மணியத்தாரின் இளவயது நண்பன் வடிவேல் மட்டும் ஓர் ஓரமாக அமர்ந்திருந்து வற்றிய கண்ணீரோடு, இதயத்தால் அழுது கொண்டிருந்தார். இப்போது மரண வீட்டு அழுகை ஒலி அதிகரிக்கிறது. மணியத்தாரின் பூதவுடல் மயானத்தை நோக்கி பயணிக்க ஆயத்தமாகிறது. வாசலுடன் நிற்கப் போகும் மனைவியின் ஓலம் வானைப் பிளந்தது. அந்த இறுதி யாத்திரையில் இறுதியாக தன் அன்பான கணவன் முகத்தை ஒரே ஒரு தரம் காண மனைவி வேண்டுகிறாள்.

நாட்டு நிலைமை நன்கு புரிந்த வடிவேல் "இஞ்ச பாருங்கோ, 'தேமாறு' சவக்காலைக்கல்லோ போக வேணும். பிறகு சென்ரியால விடமாட்டானுகள். கெதி பண்ணுங்கோ" என்று அதட்டல் குரலுடன் சத்தம் போட, வாசலை விட்டு மணியத்தாரின் இறுதி யாத்திரை வேகமாக நகரத் தொடங்கியது.

கூடவே நடந்த வடிவேலுவுடன் நினைவுகளும் தொடர்ந்தன.

இளமைக்காலங்களில் மணியத்தார் ஒரு அழகான ஆண் பிள்ளை. 'லோமா' தைலமிட்டு வாரிவிடும் தலை கேசத்தின் சுருள் மிகக் கவர்ச்சியாக இருக்கும். இவை மேலும் மேலும் அதிகரிக்க காரணம் அவன் பரம்பரை பணக்காரனும் கூட. மணியத்தின் இதயத்தில் "பயம்" என்பது என்றுமேயிருந்ததில்லை. எதையும் ஆணி அடித்தாற் போல நேரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் சுபாவமும், சந்தர்ப்பத்தில் தவறென அறிந்தால் கை நீட்டி சண்டித்தனம் செய்யவும் பின்னிற்பதில்லை. இதனால் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் மிக அடக்கம். இந்த சுபாவ நெறிகள் மணியத்தாரை அக்கிராமத்தின் அக்கிராசனராக (சேமன்) ஆக்கியது. இந்த சுபாவங்கள் வயது முதிர்ந்தும் இன்று வரை மாறவில்லை. அதுதான் இம்மரணநிலைக்குக் காரணம்.

ஊரில் முகாமிட்டிருக்கும் படையினரின் அந்த அட்டசாகங்களை பொது மக்களால் தாங்க முடியவில்லை. அதற்கு நேரடியாய் முகம் கொடுத்த மணியத்தாருக்குக் கிடைத்த பரிசு கண் மூக்கு தெரியாமல் நையப்புடைக்கப்பட்டமை. ஊரே கவலையில் ஆழ்ந்தது. மணியத்தாருக்கு அடியின் வேதனையைவிட "எங்கிருந்தோ வந்தவன் அடித்து விட்டானே", என்ற வேதனை அவர் இதயத்தில் அழியா வலியையும், வடுவையும் ஏற்படுத்தியிருந்தது.

சுகவீனத்தைக் கண்டு என்றுமே பயப்படாத மணியம் மூன்று மாதங்களின் பின் நண்பர் வடிவேலுவிடம் வந்து தனது நெஞ்சு அதிகமாக வலிப்பதாகக் கூறினார். வைத்திய சிகிச்சைக்காக கொழும்பிற்கு கூட்டிச் சென்றிருந்தனர். சோகமாய் பயணம் தொடர்ந்தது. இடைக்கிடை தனது மகன் துரையை நினைத்துக் கொண்டார். துரை கடந்த காலங்களில் சுடப்பட்டு இறந்திருந்தான்.

இப்படிப் பல விடயங்கள் மீட்கப்பட்டன.

அவையெல்லாம் இந்த இறப்புக்காய் தானோ?

கொழும்புக்குப் போகும் போது நடந்து சென்ற மணியத்தார், திரும்பி வரும்போது சென்ற படுத்த படுக்கையாக அதாவது 'சவம்' என்ற புதுப் பெயருடன் வந்தார்.

எவருக்கும் மணியத்தின் இறப்பின் காரணத்தை வாய் திறந்து கூற திராணியிருக்கவில்லை. அச் சுதந்திரம் மரணித்திருந்தது. மனதிற்குள்ளேயே ஜீரணிக்க வேண்டியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழியினுள் மணியத்தின் பிரேதம் இறக்கப்பட்டு, ஆறாக ஓடும் கண்களுடன் மூன்று பிடி மண்.... இட்டுக் கொண்டிருந்தார்கள் மக்கள்.

குருதியால் சிவப்படைந்திருந்த அந்த மணியத்தின் விம்பத்துடன்.... அந்த பிடி மண்ணை தலைவன் மார்பில் இடுகிறார் வடிவேல். அந்த சிவப்பு என்றும் நிறம் மாறப் போவதுமில்லை!

'**காலத்தின் கீறல்கள்**' உதிரப் போவதுமில்லை! அது ஓயப்போவதுமில்லை.

(சங்கமம்– ஜூன்'96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுபோதும்.....

கல்யாண வீடு களைகட்டிக் கொண்டிருந்தது. அங்கும் இங்கும் ஓடி ஓடி அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தார்கள். முத்துக்குமரன் ஆலயத்தில் இருந்து மணமக்கள் இங்கு வருகைதர இருக்கிறார்கள்.

அனைத்தையும் ஓர் ஓரமாக நின்று அவதானித்துக் கொண்டிருந்தாள் பிரியா. அவளது கடைசித்தம்பி வசந்தனின் திருமணம் இன்று. அத்தனை சிரமத்தின் மத்தியில் இவனைப் படிப்பித்து இந்த உயர்நிலைப் பதவிக்குள் உயர்த்தியவள் இந்தப் பிரியா. சாதாரண ஆசிரிய பதவிக்குள் இரு பிள்ளைகளுடன் வசந்தனையும் கவனித்தாக வேண்டும். வசந்தனின் வளர்ச்சியில் சிறிய பங்கும்கூட இல்லாத அவர்களின் மூத்த சகோதர சகோதரிகள் மார்புதட்டிக்கொண்டு

'எங்கள் தம்பி' என்ற தம்பட்டம் தட்டுகிறார்கள்.

எதுவுமே அறியாதவள் போல் பிரியா ஒதுங்கி நிற்கிறாள்.

90ஆம் ஆண்டு சுற்றி வளைப்பிலே காணாமல் போன நூற்றுக்கணக்கானோரில் பிரியாவின் கணவனும் ஒருவர். தேடாத இடமேயில்லை. இதுவரைக்கும் விடுபடவில்லை. ஆனால், பிரியாவால், 'மரணமடைந்து விட்டார்' என்ற முடிவுக்கு வர முடியவில்லை. அவள் இதயத்தில் நித்தியமாய் கணவன் வாழ்கிறான். நடைமுறை வாழ்க்கையில் அவள் பட்ட வேதனைகள் எம்மாத்திரம். அவைகளை எல்லாம் வெளிக்காட்டி, மற்றவரின் கணநேர அனுதாபங்களைப் பெற அவள் விரும்பவில்லை–அதில் நம்பிக்கையும் இல்லை.

"வாராயென் தோழி வாராயோ" பாடல் நாதஸ்வரத்தின் உச்சமாக ஒலிக்கிறது. 'வீடியோ' காரர்கள் விழுந்தடித்து காட்சிகளை படமாக்கிக் கொண்டிருந்தார்கள். எவருமே பெரிதாக பிரியாவை நினைத்ததாக தெரியவில்லை. வாசலுக்கு வசந்தன் தம்பதிகள் வந்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம்முடிந்த கையோடு வீட்டிற்கு வருகின்ற வருகையல்லவா? வலதுகாலை எடுத்துவைத்து வருகின்றனர் தம்பதியினர்.

'மஞ்சள் எங்கே? ஆராத்தித்தட்டு எங்கே? குத்து விளக்கைட் பிடியுங்கள்." திருமண வீட்டு சொந்தங்களின் குரல்கள் அவை.

வசந்தனின் கண்கள் மட்டும்

எதையோ தேடின.

ஆம்; தன்னை ஆளாக்கிய அக்கா பிரியாவை.

ஓரமாய் நின்றிருந்து.... ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள் பிரியா. சைகையால் அழைத்தான் வசந்தன்.

கண்களைத் துடைத்தபடியே அருகில் வந்தாள் பிரியா.

காதுக்குள் மெதுவாகக் கூறினான்... "அக்கா நீதான் எங்களுக்கு ஆராத்த வேண்டும்"

மறுப்புக் கூற முனைந்தாள் பிரியா.

"தேவையில்லாத கதையொன்றும் வேணாம். நான் சொன்னதைச் செய்" வியர்த்துக் கொட்டியது அவளுக்கு.

நெற்றி வியர்வை அவள் நெற்றிக் குங்குமத்தை சுற்றிப் படர்ந்திருந்தது. குங்குமம் சிதைவடையாதவாறு மெதுவாக தன் கைக்குட்டையால் ஒற்றி வியர்வையை எடுத்தாள்.

மனதில் ஏதோ உத்வேகம் தள்ள விறு விறு எனச் சென்று ஆராத்தித் தட்டை தூக்கினாள் பிரியா.

மூலைக்கு மூலை முணுமுணுப்பு. குசுகுசுப்பு. இவர்களின் ஏகபிரதிநிதியாக பிரியாவின் சகோதரி "இஞ்சே பார் பிரியா... நீ ஏன் இந்த வேலைகளை செய்து.... கஷ்டப்படவேண்டும்" என்று கூறியபடி ஆராத்தித் தட்டை பிரியாவின் கையில் இருந்து லாவகமாக பெற முற்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமலையானாள் பிரியா. நெடுங்காலமாக தீராத சந்தேகம் இன்றுடன் தீரவேண்டும்.

"இஞ்சேர், என்னை விதவை எண்டு எண்ணி தள்ளிவைச்சு நடத்துறதை புரிஞ்சு கொள்ள முடியாத ஜடம் இல்லை. என்ர 'அவர்' இதுவரைக்கும் விடுபடல என்பது உண்மைதான். ஆனால் அவரைக் கொண்டதை யார் கண்டது? என்னைப் பொறுத்தவரையில் என் நெஞ்சில் நித்தியமாய் வாழ்கிறார். அதுவும் உயிரோட தான்! சாகும் வரை நான் எண்டும் சுமங்கலிதான். அதைத்தடுக்க ஆண்டவனாலும் முடியாது. நினைச்சுக்கொள்ளுங்கோ." வசந்தனுக்கு இன்றைய மணநாளை விட மகிழ்ச்சி, பிரியா அக்காவின் வார்த்தைகளால்! இவனின் இதய ஆதங்கம் வார்த்தைகளாக கொட்டின.

"இந்த நிலைக்கு என்னைக் கொண்டுவந்த பிரியா அக்காவை தள்ளிவைச்சா கலியாண வீடு நடத்த சொல்லுறியள்? எண்ட படிப்புச் செலவுக்கு சகோதரங்கள் எண்ட நீங்கள் ஒரு சதம் தந்திருப்பியளா? சடங்கும் சம்பிரதாயங்களும் பார்க்க வந்திட்டியள். பிரியா அக்கா எப்படியானாலும் என்னை வாழவைத்த தெய்வம்! அவதான் முழு சம்பிரதாய சடங்கும் செய்யணும். அதனால் என்ன பாதிப்பு வந்தாலும் ஏற்க நாங்க தயார். ம்.... ம்.... பிரியா அக்கா என்ன பார்க்கிறாய். ஆலாத்தி எடு. குத்துவிளக்கை வை"

பொரிந்து தள்ளிவிட்டு தன் புது மனைவியை நோக்கினான் வசந்தன்.

கண்ணால் ஆமோதித்து சிறு புன்னகை உதிர்த்தாள். அது போதும் அவனுக்கு.

(தினமுரசு—ஜுன் 96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக்கியா

ஞாயிற்றுக் கிழமைதான் இன்று! வழக்கம் போல் காலை ஐந்து மணிக்கு நித்திரைவிட்டு எழுந்து விட்டேன். இன்று விடுமுறை நாள்தானே. படுக்கையில் கிடந்து கொண்டு அன்று செய்ய வேண்டியதை அட்டவணைப்படுத்தினேன்.

காரியாலயத்தில் கட்டுச்சோறு உண்ட எனக்கு இன்று சுடுசோறு உண்ணும் நாள். காலையில் 'மார்க்கட்டு' சென்று நல்ல மீன் வாங்க வேண்டும். போகின்ற வழியில் நவத்தையும், கோணேசையும் சந்தித்து மாலை கடற்கரைக்குப் போவது பற்றிக் கூறுவது; அதற்கிடையில் சுந்தாவைச் சந்தித்து அவனின் 'விழியோரக் கனவுகள்' என்ற சிறுகதைத் தொகுப்பை வாங்கிக்கொண்டு வந்து படிப்பது. இயலுமானால் இன்று விடுமுறைநாள்' என்று கூறி அவனையும் கடற்கரைக்கு அழைப்பது! என்ற திட்ட அட்டவணையுடன் குளிப்பதற்கு கிணற்றடிக்குச் செல்கிறேன்.

கண்ணாடியின் முன் முழுகிய தலையை துவட்டிக் கொள்கிறேன். ஒரு வாரம் இடைவெளியில் உறங்கியிருந்த 'டை' மெது மெதுவாக என் தலையின் கேசத்தில் இருந்து விடைபெற்றுக் கொண்டிருந்தது. அதாவது என் இளமையும் கூடத்தான்.

இப்போது வேடம் கலைந்த உண்மை உருவம். 'இன்னும் ஒருவருடம் தான் உள்ளது. நீ பென்சனில் போவதற்கு' என்று என்முன்னால் இருந்த கண்ணாடி எள்ளி நகையாடியது. என்னுள் இருந்த இளமை உணர்வு துள்ளியெழுந்தது. அந்த 'டைப்' போத்தலைத் தேடுகிறேன். மீண்டும் ஓர் இளமைக்கு!

அப்போது தூரத்தில் ஒலிபெருக்கியின் அறிவித்தல். மனைவி பதறியடித்துக் கொண்டிருக்கிறாள். "ஏன் பயப்படுகிறாய்? அது நெல்ஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியேட்டர் பட விளம்பரம்" என்றேன் பயப்படாதவன் போல் பாவனையில். இப்போது ஒலி பெருக்கி அறிவித்தல் துல்லியமாகக் கேட்டது.

"பாதுகாப்புப் படையினரால் உவர் மலைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. தப்பியோட முயற்சி செய்பவர்கள் சுடப்படுவார்கள். எனவே, மூத்த அங்கத்தினரை மட்டும் வீட்டில் விட்டு மற்றவர்கள் உவர்மலை குழந்தை யேசு ஆலயத்துக்கு வரவும். வரும் போது அடையாள அட்டை, குடும்ப அட்டை கொண்டு வரவும்" இப்போது எனக்கு அந்த இளமையும், 'டை'யும் நினைவைவிட்டு ஓடிவிட்டது. இப்போது நானா மனைவியா குழந்தையேசு கோவிலுக்குச் செல்வது? சடுதியான முடிவு. அடையாள அட்டை ஆவணங்களுடன் சுற்றி வளைப்பிற்கு யேசு ஆலயத்துக்கு ஓடுகிறேன்.

முகமூடிகள் முன் அமைந்த வரிசையில் நகர்ந்து கொண்டிருக்கிறேன். தலையாட்டத் தலையாட்ட தள்ளப்படுகிறார்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கிறேன். அதில் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் அழைக்கிறார். உடல் வியர்க்கிறது.

'மே அற நாக்கியாட்ட யண்ட கியண்ட' (இந்தா, அந்தக் கிழவனைப் போகச் சொல்லு) நான் எண்ணியதற்கு மாறு! யேசு சொரூபத்தை நோக்கி ஒரு நன்றி! 'டை' அடிக்காததன் நன்மையை யோசிக்கிறேன். மீண்டும் யேசுவை நோக்கி ஓர் பிரார்த்தனை. வடகிழக்கிற்கு தடைசெய்யப்பட்ட பொருட்களுடன் இந்த 'டை'யும் அடங்க வேண்டும். இந்த இளமை வேண்டாம். நாம் 'நாக்கியா'வாகவே வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பயணம் முடிகிறது

ஆ.... ஊ..... என்று ஊத ஊத ஆவி பறந்து கொண்டே இருந்தது.

ஞாயிற்றுக் கிழமை நேரத்திற்கே மத்தியான சாப்பாட்டிற்கு உட்கார்ந்து கொண்டு கறி பரிமாற முன்னமே.

இரண்டொருவாய் சோறுகிள்ளி எறிந்த வண்ணம் இருந்தான் மூர்த்தி. அவன் கௌரவ பிச்சைக்காரன். அதாவது நடுத்தர அரசாங்க ஊழியன்.

"இஞ்சேருங்கோ, இப்ப இரண்டு மணிக்கு ரீ.வில படமாம். நம்மட பிள்ளைகள் பக்கத்து வீட்டு ரேகா வீட்டில படம் பார்க்க போகிறதாம்" என்றவாறு சூடாகவிருந்த குழம்புக்கறியை மூர்த்தியின் சாப்பாட்டுக் கோப்பைக்குள் விட்டுக் கொண்டிருந்தாள் அவன் மனைவி கமலம். "சரி.... சரி போய் பார்க்கட்டும்..." என்றவாறு சோற்றுக்குள் புதைந்தான் மூர்த்தி.

"இஞ்சேருங்க, பக்கத்து ரேகா எப்படி இருந்தவங்க. இப்ப பார்த்தீங்களா? ரீ.வீ என்ன? டெக் என்ன? ரேகா வெளிநாட்டிற்கு போகாட்டி இதெல்லாம் அவங்கட வாழ்க்கையில காணுவாங்களா என்ன. உசும்பாம இருக்கிறீங்க" என்று சோற்றைப் பரிமாறிக் கொண்டே தொடர்ந்தாள் கமலம்.

"தனி உழைப்பு ஒரு குடும்பத்திற்கு ஒரு போதும் காணாதுங்க. அதுவும் ஒங்க மாதிரி அரசாங்க ஊழியன் எண்டா! முடியவே முடியாது. பிள்ளைகள் காலத்தைப் பாருங்க! இஞ்சேருங்க, எனக்கும் வெளிநாடு போக யோசனை வந்திருக்கு."

மூர்த்திக்கு சோறு பொறுத்தது. கமலம் ஒரு கிளாஸ் தண்ணீரைக் கொடுக்க, குடித்துவிட்டு, "கமலம்! வெளிநாட்டுக்கு போவதென்றால் காசுக்கு எங்க போறது? அதுக்கெல்லாம் அமைப்பு வேண்டும்" என்று தட்டிக்கழிக்கும் நோக்கோடு கூறிய மூர்த்தி சாப்பாடு ஆறமுதல் மீண்டும் உண்ண ஆரம்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாஸ்போட்டும் ஏஜன்சி அலுவல்களையும் ரேகா முடித்துத் தருகிறாளாம். அதுவும் பாஸ்போர்ட் தலையை மாற்றி அனுப்பிறது என்றா கூடக்காசும் தேவைப்படாது. கெதியாவும் போகலாமாம்" தொடர்ந்து சோறும் கறியும் போட்டுக் கொண்டு கேட்டாள் கமலம்.

ஆண்களை எல்லாம் அடிமைப்படுத்தி பெண்கள் தம் காரியத்தை சுலபமாக சாதிப்பதற்கான இரண்டு நிலைகளில் ஒன்று, சாப்பிடும் போது! அதுவும் நல்ல கறியோடு!! மற்றது படுக்கையின் போது.....

இதற்கு என்ன, மூர்த்தி மட்டும் விதிவிலக்கா?

சிறிய புன்னகையொன்றை உதிர்த்தவாறு மௌனத்துடன் சாப்பிட்டு கையை கழுவினான்.

அதுவே சம்மதம் என்பதை புரிந்து கொண்டாள் கமலம். உவகையால் உள்ளம் நடனமாடியது. வெளிநாட்டு நினைவலைகள் பொங்கத் தொடங்கியது.

தமது சிறிய வீட்டை எப்படி பெருப்பிக்க வேண்டும். ரீ.வீ., ரேடியோ செற் வீட்டின் எந்தெந்த மூலையில் வைக்க வேண்டும் என்று கண்ணால் நவீன படங்கள் வரைந்து கொண்டிருந்தாள் கமலம்.

குட்டித்தூக்கம் மூர்த்திக்கு? உண்டகளை தொண்டருக்கும் உண்டு.

'திடுக்கிட்டு' எழுந்த மூர்த்தி, மனைவி கமலத்திற்கு பின்னால் ஓடினான். அங்கே பக்கத்து வீட்டு ரேகா அவர்களின் சின்ன மகளை தூக்கியவாறு வந்து கொண்டிருந்தாள்.

"படம் பார்த்திட்டு வரும்போது புள்ள வாசலிலே தடக்கி படிக்கட்டில் விழுந்திட்டாள். காயம் பெரிசில்ல. எதுக்கும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க" என்றவாறு மகளை கமலத்திடம் ஒப்படைத்தாள் ரேகா.

'நம்ம வீட்டில ரீ.வீ இருந்தா ஏன் நம்ம பிள்ளைகள் மத்தவங்கட வீட்டிற்குள் போகுதுகள் ம்.... ம்....' என்று பெருமூச்சை விட்டுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய சாலை சத்திரசிகிச்சை அறையின் முன்னால் இருந்த ஆசனத்தில் அமர்ந்தவாறு கணவன் காதில் விழக்கூறினாள் கமலம். இந்த வேளையிலும் வெளிநாட்டுப் பயணத்திற்கு உரம் போடுவதாக அமைந்திருந்ததை மூர்த்தி உணராமல் இல்லை. எதையும் காதில் போட்டுக்கொள்ளாதது போன்று வைத்திய சாலையின் முகட்டில் சுழலும் மின் விசிறியை நோக்கியவாறு இருந்தான்.

அவனின் எண்ணம் எல்லாம் மகளின் காயத்தைப்பற்றியும், அதுசார்பாக ஏற்படவிருக்கும் செலவுகளையும், சிரமங்களையும் பற்றியே! இம்மாதத்தில் ஏற்படும் பணவீக்கமும், 'துண்டுவிழும் 'தொகையும் பற்றி சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

'உம்மா..... உம்மா.....' என்ற பெண்பிள்ளையின் முனகல் ஒலி அவன் எண்ணத்தை நிறுத்தியது.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் சின்ன மகள் வயதிருக்கும் அவளுக்கு. கையில் முறிவுக்கட்டு.

பிள்ளையை சுமந்தவாறு மூர்த்தி—கமலம் தம்பதியினருக்கு அருகில் அமர்ந்தார் அப்பிள்ளையின் தந்தை. பிள்ளையின் முனகல் ஒலி தொடர்ந்து கொண்டே இருந்தது.

மெதுவாக அந்தத் தந்தையிடம் பேச்சுக்கொடுத்தான் மூர்த்தி.

'என்ன நடந்தது மகளின்ர கையில?"

"அதையேன் கேக்கிறீங்க? வியாபாரத்திற்கு நான் போனபிறகு வண்டிலில் விளையாட ஏறி கையை முறிச்சிட்டாள்" என்றார் அந்த தகப்பன்.

"அப்ப இந்த பிள்ளையோட தாய் எங்க?" என்று பரிவு பொங்க கேட்டாள் கமலம்.

"அதக் கேட்காதீங்க வயிறு பத்தி எரியிது. எவ்வளவோ சொல்லியுப் கேட்காம இவள்ர உம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது என்ர மனிசி வெளிநாடு போயிட்டாள். இந்த பாழாப்போன நாட்டின் நிலைமையால ஒழுங்கா வயலுக்கு தண்ணியும் கட்டாமல் ராக்காவலுக்கும் போகாமல் வெள்ளாமை அழிஞ்சி போச்சு. என்ன செய்கிறது தலைவிதி நானும் ஓத்துதான் மனிசியை வெளியில அனுப்பினது. இப்ப பிள்ளைகளை நான் வளக்கப் படுகிறபாடு அந்த அல்லாவுக்குத்தான் தெரியும்.

எண்டாலும் பாருங்கோ யார் இருந்தாலும், தாய் இருக்கிற மாதிரி வராது. அதுகள் தங்கட இஸ்ரப்படி நடக்கப் பார்க்குதுகள். படிக்குதுகளும் இல்ல. வீட்டோட தாய் இருந்திருந்தால் இந்த பிள்ளைக்கு கை முறிந்திருக்காது. என்ன செய்கிறது. இருக்கிறதோட வாழாமல் கூட ஆசைப்பட்டிட்டம். இப்ப யோசிக்கிறன். காசு என்னையா காசு?

ஒரு நேரக் கஞ்சி என்றாலும் குடும்பத்தோட குடிக்கிற நிம்மதி வராது. இறப்பென்றாலும் எல்லோருக்கும் ஒண்டா வரட்டும். உடனடியாக வரும்படி மனிசிக்கு கடிதம். போட்டிருக்கன். ஒண்ட உழைப்பு வேணாம். நீ வந்தால் போதும். இனி வெளிநாட்டை நினைக்கக் கூட விடமாட்டன்"

அந்தப் பெண்பிள்ளையின் தந்தை மூச்சு விடாது தனது இதய ஆதங்கத்தை கொட்டினார். கமலமும், மூர்த்தியும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர். வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை அறை திறந்தது. அவர்களின் சின்னமகளை வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டு வந்தார்கள். "நாலைந்து தையல்தான். பயப்படுகிறதுக்கு ஒன்றும் இல்லை. மயக்கம்தான், சரியாகிவிடும்" என்றார் நேர்ஸ்.

சின்னமகளின் முகத்தை பார்த்தாள் கமலம். பின், கணவனைப் பார்த்தாள். கண்ணீர் கங்கையானது. மெதுவாக மூர்த்தியின் கையைப் பற்றினாள். சுழலும் மின் விசிறியில்..... அதாவது தலையை மாற்றியமைத்த.... அந்த பாஸ்ப்போர்ட் திசையின்றி அங்கும்.... இங்கும்...... பறந்து திரிவது போல் கமலத்தின் கண்களுக்குத் தெரிந்தது.

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டில் பூச்சி

விமான ஏணிப்படிகளால் மெதுவாக இறங்குகிறாள். புதிய இடம். சுற்றும் முற்றும் நோக்குகிறாள். 'ஜித்தா' தனக்கு தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தால் வாசித்து அறிந்தாள். 'முக்காட்'டை ஒருதரம் சரிசெய்து கொண்டு நடக்கிறாள். பக்குவமாக தன் பாஸ்போட்டை பார்த்து மனதிற்குள் பேரைக் கூறிக்கொள்கிறாள். 'சித்தி சுலைகா'! உள்ளூர ஒரு சிரிப்பும் பய உணர்வும்.

பால வயதுடைய இருபிள்ளைகள் கொண்ட அடக்கமான குடும்பம் அது. இரு பிள்ளைகளையும் அணைக்கிறாள். தன் பிள்ளைகளின் உருவம் பிரதிபலிக்க கண்ணீர் ஆறாகிறது. தனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்குச் செல்கிறாள். தன்பொருட்களை வைத்துவிட்டு குளிக்கிறாள்.

இப்போது அவளுக்கான 'அபாத்தி' (முக்காடு) 'ஹபாயா' (கைமூடிய உடை) உடைகள் வீட்டுக்காரரால் வழங்கப்பட்டு விட்டது. அடுத்தது தொழுகை. இதில்தான் அவள் இங்கு பணிபுரிவது தீர்மானிக்கப் படவுள்ளது. மெதுவாக கைக்குள் பொத்தி வைத்திருந்த பேப்பரில் எழுதி வைத்திருந்த வாசகங்களை மீண்டும் மனனம் செய்து கொண்டாள். அவள் தொழுகையில் ஆரம்ப புனித வாசகங்கள் அந்த அராபிய குடும்பத்தினரின் செவிகளில் அமைதியாக ஒலித்தன.

இப்போது அவளை அந்த அராபிய குடும்பம் ஏற்றுக்கொண்டு விட்டது. தன்னை அனுப்பிய இலங்கை ஏஜன்சி கூறியபடி நடித்துவிட்டாள்.

இப்போது ஒருவாரகாலத்தைக் கடந்து விட்டது. அன்று வெள்ளிக்கிழமை. அவளின் வீட்டுக்காரக் குடும்பம் தமது உறவினரை சந்திப்பதற்காக வெளியில் செல்கிறது.

அவள்.... அதாவது..... மாறுவேட சித்தி சுலைஹா மட்டும் வீட்டில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவார காலமாக கட்டுப்படுத்தியிருந்த உண்மை உணர்வுகள் உயிர்க்கின்றன. தன் பெட்டியைத் திறந்து வெளியில் எடுக்கிறாள் அந்த கைநூலை. ஆறுதலாக இருந்து சத்தமாகப் படிக்கிறாள். அந்த கந்தசஷ்டிகவசத்தை. 'துதிப்போற்கு வல்வினைபோம். நெஞ்சில் பதிற்போற்கு செல்வம் பலித்து கதித்தோங்கும்....'

பாடிக்கொண்டே நிமிர்ந்தாள். கதவு நிலையில் சாய்ந்தவாறு நின்றிருந்தான் அந்த வீட்டுக்காரன்.

அவள் கண்கள் இருண்டன. உலகம் சுற்றியது. அவனது அரைகுறை ஆங்கிலமும் சைகையும் அவளுக்குப் புரிந்தது.

'நான் இந்துதான்! எனது இரு பிள்ளைகளின் வயிற்றுப்பசியைப் போக்கவே இப்படி வரவேண்டியதாயிற்று. அத்துடன் கடந்த கலவரத்தில் கணவனைக் கடத்திச் கொண்டு சுட்டுவிட்டார்கள். நான் ஒரு விதவை."

கதறிக் கதறிக் கூறிக்கொண்டிருக்கிறாள் அவள். எப்படிக் கூறியும் ஆத்திரம் அடங்குவதாக இல்லை. ஒரு முடிவுக்கு வந்தான் வீட்டுக்காரன். புரிந்தது அவளுக்கு. அதாவது 'அவனை சந்தோசமாக வைத்திருந்தால் அவள் தொடர்ந்து பணியாற்றலாம்; சம்பளமும் அதிகரித்து வழங்கப்படும். இணக்கம் காணப்படாவிடின் சுணக்கம் இன்றி சொந்த ஊர்.

கெஞ்சிக் கெஞ்சி அழுதாள். முடியவில்லை. திரும்பிச் சென்றால் கட்டிய பணம் என்னாவாகும்? அவளின் வறுமை நிலை? கடன் தொல்லை...? சீ... நாட்டின் கலவரங்கள் எம்மையெல்லாம் இப்படியான படுகுழியில் தள்ளுகிறது. மனம் வெதும்புகிறாள். எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில் அருகில் இருந்த கட்டிலில் அமர்ந்தவாறு மீண்டும் திறக்கிறாள் கந்தசஷ்டி கவசத்தை.

**'சிற்றிடை அழகுற செவ்வேல் காக்க**

**நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க**

**ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க.**

**பிட்டமிரண்டும் பெருவேல் காக்க...'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

அந்த மேல் மாடி அறையின் கண்ணாடி யன்னல் பக்கமாக அமர்ந்தவாறு வெளியே பார்வையை விட்டுக் கொண்டிருந்தான் செல்வன். சாலையில் சாரிசாரியாக ஊர்ந்து கொண்டிருக்கும் வாகனங்களை நோக்கினாலும் சிந்தை அவைகளில் பதியவில்லை.

என்னவராயிருந்தாலும் சொந்த ஊரில் வாழும் சுகமும், நிம்மதியும் இந்த கனடா வாழ்கையில் இல்லைதான் என்று மனதிற்குள் சலித்துக் கொண்டான். அவன் வாழ்ந்த அந்தக் காலங்கள் எத்தனை இரம்மியமான ... இதமான கோடுகளை பதியவைத்த காலங்கள்... நாட்கள்...

தாய் மாமன் மகள் தேவியைத்தான் செல்வன் மணம் செய்திருந்தான். சிறு வயதிலிருந்தே இணைந்த உரிமை..... உறவு அது. உயிரோட்டமான வாழ்வை இரசித்து வாழ்ந்த காலங்கள் அவை. அதை இப்பொழுது மீட்டிப் பார்ப்பதில் மட்டும்தான் சுவை காணலாம்.

அந்த வயல் வரம்புகளில் நடந்து திரிந்து வளர்ந்த வேளாண்மையை பார்ப்பதில் உள்ள இன்பம் எத்தனை? சின்ன மணல் ஆற்றில் நனைந்து சாரனிலே முட்டை போன்று கட்டி நீந்திக் குளிப்பதில் உள்ள புத்துணர்வு எத்தனை? நடராசா அம்மாச்சி கொண்டுவரும் விரால் மீனை நல்ல செத்தல் மிளகாய் இட்டு 'சுள்' என்ற புளியுடன் உண்பதில் உள்ள சுவை தான் எத்தனை?

இரவு நேர இரண்டாம் படக் காட்சி பார்த்துவிட்டு படமாளிகையிலிருந்து சயிக்கிளில் வருவதில்தான் உள்ள களிப்பு எத்தனை?

இப்படியாக உருண்ட காலங்கள் தான் வழிமறிக்கப்பட்டு வன்செயல் காலங்களாய் திசை மாறியது. அப்பொழுதுதான் அவன் கிராமத்தில் உள்ள அகதி முகாம் தீக்கிரையாக்கப்பட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவி பொது மக்களை சுட்டுத் தள்ளியதோடு பல பெண்களின் கற்புக் கூட பறிக்கப்பட்டது. அந்தப் பட்டியலில் மிகுந்த உச்சத்தில் நிற்பவள்தான் அஞ்சலி. செல்வத்தின் வகுப்பு மாணவி. அவளிடம் அழகு நிறைந்த அளவிற்கு பணம் நிறையவில்லை. அகதி வாழ்வோடு காலந்தள்ளிக் கொண்டிருந்தாள். இவைகள் அனைத்தும் அந்த ஆயுதபாணிகளுக்கு அவளின் கற்பைப் பறிக்க ஆதாரமாயிருந்தது.

தொடர்ந்தும் இந்த அனர்த்தங்களுக்குள் வாழமுடியாது என எண்ணிய செல்வன் திருமணமாகி ஒரு சில மாதங்களில் கனடா சென்றுவிட்டான்.

இப்போது அவன் மனைவி தேவியை ஸ்பொன்சர் செய்துவிட்டு அவள் வருகைக்காக காத்திருந்தான்.

வீட்டுக் கதவு தட்டும் சத்தத்தினால் கலைந்த நினைவுகளுடன் சென்று கதவைத் திறந்தான் செல்வன். வீட்டுக்காரி கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டு ஆவலாகத் திறந்தான். அவன் தாயாரின் மடல்.

அன்பு மகன் அறிவது

நலம்; நலமாகுக.

நேரடியாகவே விடயத்திற்கு வருகிறேன். மகனே மனதைக் கல்லாக்கிக் கொள். உனது மனைவி அதாவது என் மருமகள் பக்கத்து ஊர் சீலனோடு ஓடிவிட்டாள். தலை தூக்க முடியாத அளவ வெட்கமாகவுள்ளது. இதற்கு மேல் எனக்கு எதுவும் எழுத முடியவில்லை'

கடிதத்தை படித்து முடிக்கு முன் செல்வனின் தலையில் ஆயிரமாயிரம் 'செல்' விழுந்து வெடிப்பது போலிருந்தது. கடந்தகால தன் மனைவியுடனான வாழ்க்கை மின் வெட்டுக்கள் போன்று வந்து சென்றன. "அணைக்கப்படாத தீ" தன் மனைவி என உணர்ந்து கொண்டு, ஓர் தீர்க்கமான முடிவுடன் எழுந்தான் - எழுதினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா,

எதையும் சிந்திக்க வேண்டாம். எனக்கு ஏற்பட்ட இந்த நிலைக்கு நம் நாட்டின் வன்செயல்தான் காரணம் கூறியாக வேண்டும். நான் உடனடியாக முடிவெடுக்க வேண்டியவனாகிறேன். ஆயுதபாணிகளால் கற்பை இழந்து சமூகத்தால் தனிமைப்படுத்தப்பட்டு வாழும் அஞ்சலியை நினைவிருக்கலாம். அவளை துணையாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக உள்ளேன். எனது மனைவியாக்க அஞ்சலியை கனடாவிற்கு அனுப்பி வைக்கவும்'

கடிதத்தை எழுதி முடித்ததும் செல்வனுக்கு சிந்தை தெளிவாகவும் சுமை குறைந்தும் தோன்றியது. மீண்டும் அதே கண்ணாடி ஓரமாக அமர்கிறான். எதிர் நோக்குகிறான். அதாவது மனைவியாக வாழ்ந்த தேவிக்கு அஞ்சலி செலுத்தியும் ... வாழப் போகும் மனைவி அஞ்சலிக்கு 'வரவேற்பு பா' இசைத்துக் கொண்டும்...

(தினமுரசு)

● ● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்ல வைத்தவர்கள்

"டேய்! ரமணன்! கொஞ்சமெண்டாலும் பொறுப்போடு நடக்கப் பாரடா! தனிய கூலி வேலை செய்து உழைச்சு இந்த குடும்பத்த காப்பாத்திறன். உனக்குக் கீழ் ரெண்டு தங்கச்சிமார் இருக்குதுகள். இதுகளப்பத்தி யோசிக்காம நடக்கிறியே. எப்ப இந்த 'அப்பா' என்ற 'மெஷின்' இயங்காம நிக்குமோ, அண்டைக்குத்தான் தெரியும் உனக்கு!" என்று இதய அடித்தளத்தில் உறைந்திருந்த உணர்வுகளை வார்த்தைகளால் கொட்டிய வண்ணம் இருந்தார் பொன்னம்பலம்.

இவை எதையும் காதில் போட்டுக் கொள்ளாதவாறு அவரின் மகன் ரமணன் கண்ணாடியின் முன் நின்று கொண்டு இப்போதைய நாகரீகத்துக்கு ஏற்றால் போல் தன் தலைமுடியை அலங்கரித்துக் கொண்டிருந்தான்.

"நான் சொல்லுறது காதில விழாதோ உனக்கு" என்று மேலும் ஒரு உச்சத்தொனியில் கேட்டார் பொன்னம்பலம்.

"ஓம்! ஓம்! கேட்குது! நான் என்ன படிக்காமலா இருக்கிறன். ஆனால் பள்ளிக்கூடத்தில் விளையாட்டில் நான் திறமையாய் இருக்கிறதால அதற்குரிய சாமான்கள் வாங்கச் சொல்லி 'சேர்' சொல்லியிருக்கிறார்' என்று எதையும் லட்சியம் செய்யாதது போல் கூறினான் ரமணன்.

"மகன்! நீ கெட்டிக்காறன்! இல்லை எண்டு சொல்லல்ல! இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்கு பொருந்தாது. மேலே பார்..... ஓலையில இருக்கிற ஓட்டையால நட்சத்திரங்களை எல்லாம் எண்ணலாம். சாகாமல் சீவனோடு கிடந்தா உன்ர படிப்பிற்காக எப்பிடி கஷ்ரப்பட்டாலும் உழைச்சுத் தருவன். ஆனா, இந்த பணக்கார விளையாட்டிற்கு பணம் கட்ட என்னால முடியாது. நீதான் யோசித்துப்பார்! இந்த முறை சோதனை எடுக்கிற நீ கவனமாகப் படி! நீதான் குடும்பத்த காப்பத்திற மூத்தபிள்ளை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தன் மகனின் போக்கிற்கு அமைவாக அடங்கி பவ்வியமாக கூறினார் பொன்னம்பலம்.

தெருவெங்கும் 'அல்லோல கல்லோலம்.' பாடசாலை விட்டு வரும் தமிழ் மாணவர்களை பொலிசார் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள். பெற்றோருக்கு காரணம் புரியாது பதறிக்கொண்டு நின்றார்கள். அதில் பொன்னம்பலம் குடும்பமும் இணைந்து கொண்டு இருந்தது. அடுத்தநாள் பெரும்பாலான மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ரமணனோடு சேர்ந்து நான்கு பேர் விடுதலை செய்யப்படவில்லை. பொன்னம்பலம் போகாத 'பெரிய இடங்கள்' இல்லை. பொலிஸ் நிலையத்தில் தனது நிலையையும் தன் மகனின் கல்வி நிலையையும் பலமாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

நான்கு நாட்களின் பின்னர் ரமணனுக்கு விடுதலை. தாயும் தகப்பனுமாகச் சேர்ந்து ரமணனின் வெளிக்காயங்களுக்கு மருந்துகள் இட்டனர். ஆனால் ரமணனின் உட்காயங்களுக்கு... அவர்களால் மருந்திட முடியவில்லை.

'மகன், என்ன கேட்டு அடித்தார்கள்?" என்று கேட்டார் பொன்னம்பலம். மெதுவாகச் சிரித்தபடி "கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டு எனது முழங்கையைப் பார்த்தார்கள். நான் கிரிக்கட் விளையாட்டுக்கு பயிற்சி செய்யும் போது, முழங்கையில் ஏற்பட்ட அந்த உராய்வுக் காயத்தை கேட்டுத்தான் கூட..." என்று முகத்தைக் மூடிக்கொண்டு அழுதான். குடும்பமே சேர்ந்து அழுதது.

அவன் அங்குதான் போய்விட்டான். 'போகவைத்து விட்டார்கள். ரமணன் தனக்கு தெரிந்த பாதையில் சென்று விட்டான். பொன்னம்பலத்தால் தேடவும் முடியாது. வெளியில் கூறவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடை'யார்'

"க்கூ.... க்காய்...." என்ற சத்தம் தொலைக்காட்சிப் பெட்டியைப் பிளப்பது போல் இருந்தது. அதி உக்கிரமாய் நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் போட்டியில் சிறிதும் கவனம் கொள்ளாத "உடையார் சித்திரவேலர் மெதுவாக சாய்வு நாற்காலியை தூக்கிக் கொண்டு வெளி வராந்தையின் ஓரமாகப் போட்டுச் சாய்ந்தார்.

மனதிற்குள் வெறுப்பு நெருப்பாக இருந்தது. தன் மனைவி அதுவும் வயோதிபத்தை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருப்பவள்! சொந்த மண்ணை விட்டு வேறெங்கும் வாழ மாட்டேன் என ஆரம்பத்தில் அடம் பிடித்தவள்! இப்போது..... கொழும்பில் வாழ்ந்து கொண்டு கிரிக்கெட்டை விமர்சித்துக் கொண்டிருந்தவளை, சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே... தன் சின்னச் சுருட்டை இழுத்துக் கொண்டு நோட்டம் விட்டார் உடையார் சித்திரவேலர்! சிரிப்பு இதயத்தால் வெளி வந்தது. வெப்பத்துடன்.... எரிந்து கொண்டிருந்த அந்தச் சுருட்டின் முனையை அவரது சின்ன விரல் தட்டி விட்டது. சாம்பரின் துகள்கள் காற்றில் விசாலித்துப் பறந்தன...... தனது கடந்தகால நினைவுகள் போன்று!

மல்லிகைத்தீவு... பழம் பெரும் விவசாய கிராமம்! இங்கு கௌரவ உத்தியோகங்களில் "உடையார்" உத்தியோகமும் ஒன்று! சித்திரவேலரின் குடும்பம் தான் பரம்பரையாகப் பார்த்து வந்தது. கழுத்துச் சால்வையும் தலைப்பாகைக் கட்டும் சித்திரவேலரின் ஆஜானுபாகுவான தோற்றத்திற்கு மெருகூட்டியது. உடையார் சித்திரவேலர் முன் நின்று நடத்தாத விசேடங்கள் இல்லை.

நடந்தேறிய கலவரங்களில் மகுடம் வைத்தது 90 ஆம் ஆண்டு. நெருக்கடியை தாங்க முடியாமல் மூத்த மகன் வெளிநாடு தள்ளப்பட்டான். கடைசி மகனோடு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில்தான் வெளிநாட்டு மகனிடம் இருந்து "கட்டளை" வந்தது.

சொந்த ஊரை விட்டு கொழும்பில் வாழ்வதை எண்ண... உடையார் சித்திரவேலருக்கு உயிரை விடுவது போன்று இருந்தது. என்ன செய்வது? கடைசி மகன் கிருபாவை காப்பாற்றி ஆக வேண்டுமே!

ஒரே பிடியாக நின்று கொண்டான் கிருபா. "அப்பா! நீங்க இந்தக் காதுக் கடுக்கனையும் குடும்பியையும் வெட்ட வேண்டும். அப்போதுதான் நான் கொழும்புக்கு வருவன். இல்லாட்டி இங்கே கிடந்து... எப்படி சாகிறேனோ....?" அவன் முடிக்கவில்லை. பாய்ந்து கிருபாவின் வாயை பொத்தினாள் தாய். "இஞ்சாருங்கோ!! பயல் சொல்லுறபடி செய்யுங்களேன். கொண்டையும், கடுக்கனும் இல்லாட்டி குடியா முழுகிப் போகும்?" மனைவியின் சொற்கள் அம்பென பாய்ந்தது அவருக்கு.

"அடியே! உங்களுக்கு எங்கடி தெரியப் போகுது இதுர மதிப்பு? என்ன செய்யிறது? காலம் அப்படிப் போயிற்று" என்றவாறு மெதுவாக நடந்தார். என்றுமே உடையாத "உடையார்" சித்திரவேலர்.

கூச்சல் சற்று ஓய்ந்தது. கிரிக்கெட் போட்டி தாக சாந்திக்காக நிறுத்தப்பட்டது. வெளியே வந்து தன் மகன் கிருபாவை ஏறிட்டுப் பார்த்தார் உடையார். அவனது ஒற்றைக் காது கடுக்கனும், சிறு குடும்பியும் அவரைப் பேசத் தூண்டியது. "தம்பி! வாறமுறை வாற காசிலே நான் கடுக்கன் செய்ய காசுதரவேணும்" என்றார்.

"என்னப்பா! இளமை திரும்புதோ? கிரிக்கெட் போட்டி பார்த்து உங்களுக்கும் கடுக்கன் ஆசை வந்திட்டோ?" என்றான் மகன் கிருபா.

முன்பின் யோசியாது வார்த்தைகளை பொரிந்து தள்ளினார் உடையார் சித்திரவேலர்.

"டேய்! அவனை இவனைப் பார்த்தாடா நான் கடுக்கன், கொண்டை போட்டது? நீ அப்படியிருக்கலாம். இது பரம்பரை சொத்துக்கள். என்னைப் பார்த்து கடுக்கன் நீ போட்டிருந்தா நான் ஏத்திருப்பேன். இத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்ல கட்டியது எங்கட பரம்பரையடா! எண்ட கொண்டையும், கடுக்கனையும் களட்டச் சொல்லிப் போட்டு, நீ போட்டுக் கொண்டு எனக்கு முன்னால் திரியுறா.... என்ன? நாளைக்கே நான் ஊருக்குப் போறன். நீங்க எப்புடி கிடந்தாலும் 'பரவாயில்ல. பச்சைத் தண்ணிய குடிச்செண்டாலும் கௌரவமா வாழலாம்!"

உடையாத உள்ளத்துடன் எழுந்த சித்திரவேலர் உடையார் பெட்டி படுக்கைகளைக் கட்டத் தொடங்கினார்.

**தினமுரசு (செப்டம்பர் 09.1995)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லெண்ணெய்

அவசர அவசரமாக சோமபாலன் உடுப்புகளை அடுக்கிக் கொண்டிருந்தான். நாளை கொழும்பில் நேர்முகப் பரீட்சை. பதவி உயர்வுக்கான பரீட்சை. 45 வயதிலாவது பதவி உயருமானால் மனைவியிடம் சிறு மதிப்பு உயரும். அந்த வகையிலாவது அவருக்கு மகிழ்ச்சி.

"அப்பா அடையாள அட்டையை எடுத்து வைச்சிட்டியளே? அதுதான் கவனம். கொழும்பில ஆக்களைப் பிடிக்கிறாங்க" அப்பாவை 'சிறை மீண்ட செம்மலாக்க' விரும்பாத தனையன் குமரனின் குரல் அது.

"டேய் குமரா! வயசைப் பார்த்தவுடன் விட்டுவிடுவானுகள். மற்றது என்ட அடையாள அட்டையைப் பாத்தனீதானே? சோமபாலன் என்டது அவனுகளுக்கு சோமபாலா எண்டுதான் விளங்கும். அத்தோடு பத்து வரிசம் கண்டியில வேலை செய்ததால பாஷையிலும் கண்டு பிடிக்க முடியாது" என்று கூறியபடியே மீண்டும் ஒரு முறை அடுக்கிய சாமான்களை நோட்டம் விட்டார் சோமபாலன்.

சரிந்து கிடந்த அந்த நல்லெண்ணெய்க் குப்பியை நிமிர்த்தி அதன் மூடியை மேலும் இறுக்கிப் பூட்டி வைத்தார்.

கொழும்பிலுள்ள மிக மலிவான, அடிப்படை வசதியில்லாத லொட்ஜில் தான் தங்கியிருந்தார் சோமபாலன். ஒரு நாள் கூத்து மீசைதானே.

காலை பத்து மணிக்கெல்லாம் நேர்முகப் பரீட்சை முடிந்துவிட்டது. பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டார். இன்று எப்படியாவது எம்.பி.ஐச் சந்தித்து ஒரு 'தள்ளுப்' போடச் சொல்ல வேண்டும். நான் அவருக்கு வாக்களிக்கவில்லை தான். அது எங்கே அவருக்குத் தெரியப் போகுது. ஊரில் சந்தித்தால்தான் 'வால்'களால சிக்கல். கொழும்பிலையெண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர் காணப் போகிறார்கள்" என்று எண்ணியபடி இருந்த சோமபாலனின் எண்ணங்கள் திசை திரும்பி ஸ்தம்பித்தது.

பஸ்சுக்குள் ஏறிய படையினர் திடு திடுவென எவனையோ தேடினார்கள். ஒவ்வொருவரினதும் அடையாள அட்டை பரிசோதிக்கப்பட்டது. இப்போது சோமபாலன் தப்பி விட்டார். இதயத்தில் 'திக்' 'திக்' ஒலி வேகமாகக் குறைந்துவிட்டது அவருக்கு.

இறுதியாக சென்ற படைவீரனுக்கு சிறு சந்தேகம். சோமபாலனின் அருகே வந்து சற்று குனிந்து அவரின் தலையை மோப்பம் பிடித்தான். மறு கதையில்லை, இழுத்துக் கொண்டு சென்றான். சோமபாலாவின் நல்லெண்ணெய் இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது.

இனி எப்போ என் மகன் குமரனைக் காண்பேன். அவர் மனம் ஓலமிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் ஒரு நாள்................

அந்த நீண்ட வாங்கில் அமர்ந்திருந்தவர்களுடன் சுந்தரமும் அமர்கிறான். 'இன்று எப்படியாவது எம்.பி.யை சந்தித்தாக வேண்டும்' என மனதில் எண்ணிக் கொண்டான்.

அந்த பாராளுமன்ற உறுப்பினரின் வாயில் காவலாளி தனக்கு தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி உள்ளே அவரை சந்திக்க விட்டபடி நின்றான். அரசன் எவ்வழி. தானும் அவ்வழி.

இத் தடைகளை உடைத்தெறிவபர் போல் ஒருவர் வந்தார். வாட்டசாட்டமான தோற்றம். அவரின் பின்னால் இரண்டொரு அடியாட்கள். மதுபோதையால் வார்த்தைகள் தடுமாறின. "தம்பி! எம்.பி.உள்ளேயே இருக்கிறார்?" என்று கேட்டபடி பதிலுக்குக் காத்திராமல் உள்ளே சென்றார்.

காரசாரமான வாதம். இல்லை....... கத்தல்!

"என்ன நீங்கள்! சொல்லுறத செய்யிறியலில்ல. இந்த எலக்சனில உங்களுக்காக என்ன பாடுபட்டிருப்பம். இந்த மாதத்துக்குள்ள....' வார்த்தைகளை முடிக்கவில்லை. எம்.பி. பெட்டிப்பாம்பாக பேசினார்.

"இஞ்சேர். நீ ஒண்டுக்கும் யோசிக்காத. அமைச்சர் வெளிநாட்டிற்கு போயிருக்கிறார். வந்ததும் முடிச்சுத் தாறன்"

அத்துடன் அமைதியடைந்தவாறு அக்கனவான் தட்டுத்தடுமாறி செல்கிறார்.

இவை அனைத்தையும் அமைதியாக அவதானித்த சுந்தரம் அவனுக்குரிய முறை வர மெதுவாக எம்.பி.யின் அறையினுள் நுளைகிறான்.

நேரமும் காலமும் சரியில்லை என்று உணர்ந்திருந்தும் வேறு வழியின்றி உள்ளேறிவிட்டான்.

"ஐயா! என்ன ஞாபகம் இருக்குத்தானே. அந்த, 90ம் ஆண்டு.... அப்பாவையும் அண்ணாவையும் ஒண்டா சுட்டுப் போட்ட" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் முடிக்கவில்லை.

"ஓம்....ஓம்... அதுக்கென்ன? நடக்காததே நடந்து விட்டது. விசயத்தை சொல்லும்" என்ற எரிந்து விழுந்தபடி எம்.பி. பேசினார்.

"அதுதான் ஐயா, 'என்ற வேலை விசயம்." என்று சுந்தரம் முடிக்கவில்லை. "சரி... சரி....உம்மட அந்த அப்பிளிகேசனத் தாரும்' என்றார் எம்.பி.

கையில் இருந்த அப்பிளிகேசனை இருக்கரங்களாலும் நீட்டினான். இதோடு சுந்தரம் ஐந்தாவது தடவையாக கையளிக்கிறான். மெதுவாக இடத்தைவிட்டு நகர்கிறான்.

"உண்மையான துயரங்களையும், தேவைகளையும் அறிந்து புரிந்து கொள்ள முடியாதவன்: அரசியலுக்கு அனாவசியமானவன். ஆனால் அவர்களுக்குத்தான் வாய்பான காலங்கள்" என்று மனதிற்குள் தன் நிலையை எண்ணி வேதனைப்பட்டவாறு நடந்து கொண்டிருந்தான் சுந்தரம்.

***

பாஸ்போட் படிவத்தை நிரப்பிவிட்டு ஒருமுறை பார்த்தான் சுந்தரம். "என்ன அழகான என் எழுத்து' என மனதிற்குள் பெருமைப்பட்டுச் கொண்டான். ஆனால் அதுபோல் அவன் தலையெழுத்து அமையவில்லை.

வேலை தேடியபடலம் ஓய்ந்துவிட்டது. குடும்பத்தை காப்பாற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடுவதில் நாட்டம்.

பாஸ்போட் படிவத்தை புரட்டுகிறான்.

ஜேபியின் அதாவது சமாதான நீதவானின் கையொப்பம் பெறவேண்டும். குழம்பிச் செல்கிறான்.

தெருவெங்கும் சமாதான நீதவான்கள் மலிந்திருந்தார்கள். ஆனால் சமாதானம்' மலியவில்லை.

கதவை தட்டுகிறான் சுந்தரம்–கதவுதிறக்கப்படுகிறது.

ஐயா! ஜே.பி. இருக்கிறாரோ" என்றான் அடக்கமாக.

"நான் தான்! என்னவேணும்?" என்றார் அப்பெரியார். சுந்தரத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிவாரிப்போட்டது.

மதுபோதையில் வந்து எம்.பி. வீட்டில் கலக்கியவர் இப்போது சமாதான நீதவான்.

"ஐயா! ஒரு கையொழுத்து வேணும்" என்றான் சுந்தரம்.

"கையெழுத்துத் தரலாம். நீ என்ன குழப்படிகாறனோ? என்ன?" என்று அவர் பேசிமுடிக்கவில்லை.

சுந்தரத்திற்கு பொத்துக் கொண்டு வந்தது கோபம்.

"இஞ்சேருங்கோ.... நான் குழப்படிகாறன் தான். ஆனால் உம்மைப் போல குடிச்சுப் போட்டு வெறியில கூத்தாடுற குழப்படி காறனில்ல நான்"

பதிலுக்கு காத்திராமல் பாஸ்போட்டுடன் வெளியேறினான். சுந்தரம்— வெளிநாட்டு பயணத்தை காற்றில் பறக்கவிட்டு!

'வாறமுறை தேர்தல் கூட்டத்தில் பங்கு பற்ற வேணும். இந்த போலி வேசங்களை உடைச்செறியவேணும்'

இது, அவனின் இதய சுவாலையின் கதிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதில் மேல்

"என்னங்க! நீங்க இன்னைக்கு செய்தது சரியா? என்னதான் இருந்தாலும் இப்படி ஏசியிருக்கக் கூடாது. சிவலிங்க அண்ணா எவ்வளவு பொறுமையாக இருந்தார்.

பொதுவாகத்தானே மதில் கட்டிறம். அரை அடிதானே அகட்டிக்குடுக்க வேண்டியிருக்கு! பக்கத்து அயல் ஆபத்துக்குத் தேவை"

ராஜனின் மார்பில் படர்ந்தபடி அவன் பிடரி மயிரை கோதிக்கொண்டு பவ்வியமாகக் கூறினாள் பத்மா.

"இந்தக்கதை ஒண்டும் நீ கதைக்காதே. அரை அடி என்ன... ஒரு இஞ்சியும் தள்ளமாட்டன். கொலைதான் விழும் ... ஓ...

என்ற குடும்ப மானமே இதிலதான் இருக்கு! பொறு! இன்னும் ரெண்டு கிழமைக்குள்ள பொதுமதில் கட்டிக்காட்டிறன்" ஆத்திரத்துடன் முழங்கினான் ராஜன்.

பத்மா என்ன... அந்த இரவே அத்துடன் மௌனித்தது. ஆனால் பத்மாவின் சிந்தனை மட்டும் யாத்திரை செய்தது.

தனது இரு பிள்ளைகளையும் ஒரு கணம் எண்ணிக்கொண்டாள். ஆண்களுக்கு எங்கே புரியப் போகிறது?!

அயலுடன் பகைப்பது எத்தனை பாதிப்பை உண்டுபண்ணும். அரை அடியில் தன் கணவனின் கௌரவத்தை நினைத்தாள். ஆறடி நிலம் கூட... அதுவும் 'டயராக' இருந்தால் சாம்பலும் இல்லை.

உருண்டது ஒரு மாதம்.

மீண்டும்..... கடந்த காலங்கள் விடியும் பொழுது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதியுடன், பயத்துடன்.

வெடிகள் 'செல்' தாக்குதல்கள்! அவலங்கள்! ஓலங்கள்! மரணங்கள்! மறுபடியும் ஆரம்பம்.

அன்று வெள்ளிக்கிழமை. விடிந்தும் விடியாத காலை.

காதைத் துளைத்தது வெடிச்சத்தங்கள்.

ராஜனின் வீட்டு முன் வீதியால் ஜனங்கள் அல்லோல கல்லோலப்பட்டு, புழுதியை கிளப்பிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தார்கள். ராஜனும் பத்மாவும் மெதுவாக படலையைத் திறந்து வீதியை நோக்கினார்கள் இறுதியாக 'சில்லறை பார்ச்சல்' வந்த முதியவரிடம் சம்பவத்தை வினவினார்கள்.

"ஐயோ! நடையில போன ஆமிக்காரன்களுக்கு வெடியாம்! அந்தா சுட்டு வாறான்கள்"

பதறினாள் பத்மா. செய்வது தெரியாத நிலை. எங்கே ஓடுவது? பொருட்கள் எதை எடுப்பது? சிந்தித்து முடிவெடுக்கமுடியாத நிலை. ராஜனும் பத்மாவும் ஓடிச்சென்று அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை ஆளுக்கொன்றாக தூக்கிக் கொண்டு பின்புறமாக ஓடினார்கள்.

மதில் சுவர்! அந்த சீன மதில் சுவர்!

பின்பக்க மதில் அவசர பயணத்தைத் தடுத்தது. வேகமாக ராஜன் கொண்டு வந்த கதிரை பத்மாவை பாய்வதற்கு துணைசெய்தது.

பின் வீட்டு சிவலிங்கத்தின் மனைவி பத்திரமாக பத்மாவையும் பிள்ளையையும் கைகொடுத்து இறக்கினார்.

ராஜன் மற்றப் பிள்ளையை ஏந்தியவாறு மதிலில் இருந்த வண்ணம் சிவலிங்கத்தின் வீட்டுப்புறம் ஒரு காலை கீழே நகர்த்தினான். மதிலின் மத்தியில் இருந்த வண்ணம் 'அந்த அரை அடி 'நிலத்தை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணம் மீட்டினான். கண்கள் குளமாகியது.

"கொலையே விழும் என்று கூக்குரல் இட்டவன் இப்போ கொலைக்குப் பயந்து ஏன் பாய்ந்து ஓடுகிறாயா?" என்று 'அந்த அரை அடி' மதில் ஏளனம் புரிவது போல் தோன்றியது ராஜனுக்கு.

வெடிகளின் ஒலி இப்பொழுது அண்மையில் கேட்கிறது.

"ராஜன்" என்று மெதுவாக கூப்பிட்டவாறு கையை நீட்டினான் சிவலிங்கம்... ராஜனின் குழந்தை அவன் கையில் இருந்து கொண்டு ஏதோ தனக்கு எல்லாம் விளங்கியது போல தன் 'பொக்கை வாயால் சிரித்தது.

(தினமுரசு ஜூலை 23-29. 1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவு

நீண்ட நாட்களுக்குப் பின் இயங்கும் அந்த மணிக்கூட்டு கோபுரத்தின் மணி ஒலி காரிருளைக் கிழித்துக் கொண்டு பன்னிரெண்டு அடித்து ஓய்ந்தது. ரஞ்சனிக்கு தூக்கம் வருவதாகவே இல்லை. மெதுவாக கணவனுக்கும், கைக்குழந்தைக்கும் இடையூறு ஏற்படா வண்ணம் அந்த புதிதாக வாங்கிய கசற் றேடியோவை தட்டுகிறாள். பழைய பாடல்கள் எம். பி. பரமேஸ் பாடியவைகள். அதாவது கணவனின் தெரிவுகள். முற்போக்கான எண்ணம் கொண்ட முற் கோபக்காரர். ரஞ்சனியைக் காதலிக்கும் போது கடிதத்தில் அவர் எழுதிய காதல் வரிகள் ஒலிக்கின்றது.

"மணக்க முடியுமா மலர் தொடுக்காமல் – மாலையாகுமா அதைத் தொடுத்தெடுக்காமல்"–பாடல் தொடர்ந்தது!

"நிலவு தெரியுமா ஓடும் முகில் விலகாமல் – உன் நினைவு புரியுமா நீ நெருங்கி வராமல்"

ஆகா... மீண்டும் கேட்க.... ரஞ்சனியின் மனம் பொங்கியது. இருந்தாலும் முற்றாக ரசிக்க அவளால் முடியவில்லை. இந்த இருளில் புரண்டு புரண்டு படுத்தாள்.

அன்று பாடசாலையில் அதிபர் கூறிய "ஆசிரியர்களுக்கான கஷ்டப்பிரதேச கொடுப்பனவு (றிஸ்க் எலவன்ஸ்) நாளை வழங்கப்படும்" என்ற அறிவித்தல் அன்றைய இரவு நித்திரையை சூறையாடிக்கொண்டிருந்தது.

மனசிற்குள் கணக்குப் பார்த்துக் கொள்கிறாள். அங்காலையும் இங்காலையும் தள்ளினால் ஒரு ஏழாயிரம் தேறும். சமூக அந்தஸ்துக்காக ஆசிரியை ஆனவள். ஆனால் இப்போது அரைவாசி குடும்ப பாரத்தை அது குறைக்கிறது.

பாடல்களோடு முடிவடைந்த கசற் றேடியோ தன்னாலே நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சனிக்கு நித்திரை கிட்டவும் இல்லை.

கசட்டை மறுபக்கம் போடும் நோக்கம் வந்தது அவளுக்கு படுத்திருந்த வண்ணம் அந்த இருளில் கையை நீட்டித் தேடினாள். தட்டுப்பட்டது றேடியோவில். மறுகணம்!...

சலோ் என்ற ஒரு சத்தத்துடன் வீழ்ந்தது அந்த கசட் றேடியோ. கைக்குழந்தையும் பயந்து வீரிட்டு அழுதது. லைட்டைப் போட்டான் கணவன். விறைத்து நின்றாள்.

"நித்திரை கொள்ளுற நேரத்தில் பாட்டா வேணும்" என்று கொடுத்தான் ரஞ்சனியின் கன்னத்தில்–கணவன்.

அவள் கணவனிடம் வாங்கிய அந்த கொடுப்பனவுகளுடன் உடைந்து கிடந்த அந்த றேடியோவை நோக்குகிறாள். புதிய றேடியோ. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல். அதுவும் வாயை, வயிற்றை கட்டி சீட்டுப் போட்ட காசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தணல்

"ஐயா... ஐயா எத்தனை நாளைக்குத்தான் இப்படி கஷ்ரப்படுகிறது. ஒங்கக்கிட்ட சொல்லிப்போட்டு செய்யலாம் எண்டு..." என்று மிக மரியாதையாக தன் விண்ணப்பத்தை விடுத்தாள் ராஜேஸ்வரி.

நிவாரணப் பட்டியலை கணக்குப் பார்த்து சீர்செய்து கொண்டிருந்த அந்த அகதிமுகாம் பொறுப்பதிகாரியான விதானையார் முபாரக் தன் மூக்குக் கண்ணாடியை மேசையில் வைத்தபடியே "என்ன ராஜேஸ் சொல்லு" என்றார்.

"இல்ல ஐயா.... நீங்க செய்யிற உதவியை ஒருபோதும் மறக்கமாட்டன். இஞ்ச தாற நிவாரணம் காணதெண்டு தெரிஞ்சு வெளியில கூலிவேலை செய்து பொளைக்க விடுறிங்களே, அது பெரிய புண்ணியமுங்க" அத ஒரு நாளும்..." என்று அடுக்கிக் கொண்டு போன ராஜேசின் உரையை இடைமறித்தார் விதானையார் முபாறக்.

'இஞ்சார் ராஜேஸ். முகத் துதியை நான் விரும்பிறதில்லை. அதவிட்டு விசயத்துக்கு வா...." என்றார்.

"ஐயா! இந்த ஆடியோட எண்ட மனிசனைச் சுட்டுக் கொண்டு ஐஞ்சு வரிசம் ஆகிறது. இண்டு வரை நான் படுறபாடு எல்லாம் உங்களுக்கு தெரியும் நாங்க சொந்த ஊரோட போகப்போவதும் இல்லை. இந்த அகதி வாழ்க்கை ஓயப்போறதும் இல்லை" என்றபடி பெருமூச்சொன்றை விட்டாள் ராஜேஸ்வரி.

"சரி சரி.... இது தொடர்கதைதான். எனக்கு நேரம் போகிறது. விசயத்தை டக்கண்டு சொல்லு" என்றார் முகாம் பொறுப்பதிகாரி முபாரக். தொடர்ந்தாள் ராஜேஸ்.

"ஐயா என்ட மூத்த பிள்ளை சாந்தியை பொழும்புக்கு வேலைக்கு விட போறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மா இடிக்கிற வீட்டுக்காறர் தங்களுக்குத் தெரிஞ்ச வீட்டில விடுகினமாம். வீட்டு வேலைக்கு பொம்பிளப் பிள்ளை வேணும் என்று கேட்டவையளாம்"

"ராஜேஸ் எப்படி என்றாலும் குமர்ப்பிள்ளைகள் தாயோடுதான் இருக்கணும். இது சரியெண்டு படல. 1987ஆம் ஆண்டில இருந்து இன்று வரை இந்த அகதிமுகாம் அனுபவம் எனக்கிருக்கு. இப்பிடி எத்தனையோ பேர் வந்து உதவி செய்யிற போல கூட்டிப்போய் கொடூரமாய் நடத்திருக்காங்க. ஏதோ உண்ட இஷ்ரம்" என்று கூறிக்கொண்டே தன் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு அந்த நிவாரணப் பட்டடியலில் மூழ்கினார் முபாரக்.

***

"ராஜேஸ்வரி! இந்தாம்மா... உனக்கு கடிதம். மகள் சாந்தி போட்டிருக்காள் போல. அவள் போய் இரண்டு மாசத்துக்கு பிறகு கடிதம் வருகுது. என்றவாறு ராஜேஸ்வரியிடம் கடிதத்தை நீட்டினார் முபாரக் விதானையார்.

அன்புள்ள அம்மா!

மகள் சாந்தி எழுதுவது. என்னால் ஒரு நிமிடம் கூட இங்கே இருக்க முடியாது. எல்லோரும் ஒன்றாக வாழ்வோம். அல்லது சாவோம். அவசரத்தில் இக்கடிதம் எழுதுகிறேன்.

நான் இருக்கும் வீட்டுக்காரன் – அந்த நரைத்தவன் என் இஷ்ரத்துக்கு மாறாக கெடுத்து விட்டான். எல்லாம் விபரமாக நேரில் கூறுகிறேன். உடன் வந்து என்னைக் கூட்டிச் செல்லவும். தவறினால் பிணம் தான் மிஞ்சும்.

இப்படிக்கு

மகள் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தை முழுதாக படித்து முடிக்க முன்னரே தலை சுற்றிக்கொண்டிருந்தது. ராஜேஸ்வரிக்கு. ஒரு கணம் மகள் சாந்தியின் வரிகளை நினைத்துக் கொண்டாள்.

"எல்லோரும் ஒன்றாக வாழ்வோம், அல்லது சாவோம்"

"ஐயா, இண்டைக்கு கொழும்புக்கு போகப்போறன். மகளைக் கூட்டி வரவேணும்."

இப்போது ராஜேஸ்வரியின் முன்னைய மரியாதை தென்படவில்லை. 'வெடுக்' கென்று கூறிவிட்டு அனுமதியை விதானையாரிடம் எதிர்பாராது நடக்க முற்பட்டாள்.

'ராஜேஸ்! நாளைக்கு இஞ்ச உள்ள அகதிளை கணக்கெடுக்க எங்க ஒப்பீசால அதிகாரிமார் வாறாங்கள். இஞ்ச நீ நிற்காட்டி நிவாரணத்தை இழக்க வேண்டி வரும்.. ஓ... சொல்லிட்டன்" என்றார் முபாரக் தமக்கே உரிய 'விதானை' பாணியில்.

சுட்டெரிக்கும் பார்வையோடு அவரைத் திரும்பிப் பார்த்தாள் ராஜேஸ். அந்த 'பார்வை' எரிந்த அவள் இதயத்தின் தணலாகும்.

'போடா ஒண்ட நிவாரணமும் நீயும் இழக்கக் கூடாது எண்டு இவ்வளவு நாளும் காப்பாத்தி வந்ததே இழந்திட்டமாம். ஒண்ட நிவாரணத்தை இழந்துதான்... மலை சாயப் போகுது." இதை இதயத்தால் மட்டும் தான் பேசினாள். ஆனால் வார்த்தைகள் வெளிவர மகள் சாந்தியின் 'கற்பு' அவள் வாய்க்கு பூட்டிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பொங்கல்

விடியலை உணர்த்தும் தாரகை மெதுவாக 'மறைந்து கொண்டிருக்க நிலமும் வெளித்துக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் ஒழுங்கான நித்திரை வராமையால் வழக்கத்திற்கு மாறாக நேரத்துடன் எழும்பிய பற்றிக் அன்ரனி அந்த இருதயபுரம் யேசு ஆலய அகதி முகாம் குடிசையின் வாசலில் அமர்ந்திருந்தான்.

விடிந்தால் நத்தார். எட்டு வயதை தாண்டாத ஜோன்சனுக்கும் கிரேசுக்கும் என்ன பதில் சொல்வது? எழும்பியவுடன் 'புதுச்சட்டை எங்கே அப்பா?' என்று கேட்கப் போகிறார்களே. மனம் வேதனையால் விம்ம விம்ம சிந்தித்துக் கொண்டிருந்தான்.

'இந்தாங்க தேத்தண்ணி' என்று கோப்பையை நீட்டினாள் அவன் மனைவி சரஸ்வதி.

அப்போதெல்லாம் மூதூர் அன்ரனிஸ் பாடசாலைக்கு பற்றிக் அன்ரனியும் சரஸ்வதியும் ஒரே பஸ்சில்தான் செல்வது. பரீட்சையில் தேறினார்களோ இல்லையோ காதலில் தேறினார்கள். திருமணத்திற்கு மதம் ஒரு தடையாக இருந்தது. அதுவும் முருகன் ஆலய வண்ணக்காரரின் மகள் சரஸ்வதி. தாண்ட முடியாத தடை. தாண்டித்தான் ஆக வேண்டிய நிலை. இரு பகுதியினரின் சம்மதமற்ற நிலையில் திருமணம் நடந்தேறியது.

இப்போது பற்றிக் அன்ரனியின் குடிசைக்கு அடுத்தாற்போல் அவன் மாமா, மாமியின் குடிசை. அதாவது சரஸ்வதியின் பெற்றோர். கடந்த கால அனர்த்தங்கள் வன்செயல்கள் ஒரே அகதி முகாமில் இணைய வைத்து விட்டது. 'வறுமையிலும்' ஓர் மகிழ்ச்சி.

'இந்த முறை ஒழுங்கான வெள்ளாமை செய்யிற நிலையிருந்தா நமக்கு இந்த கஷ்டம் வந்திருக்காது. வெள்ளாமை வெட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியாட்கள் தேவையிருக்கும்' என்று விரக்தியுடன் கூறிக்கொண்டு தன் கணவனுக்கு அருகில் உள்ள பலகைக் குற்றியில் அமர்ந்தாள் சரஸ்வதி.

நத்தார் சட்டையைக் காட்டுங்கோ' என்று கேட்டுக் கொண்டு மடியில் ஏறினாள் கிறேஸ். தகப்பனின் பதிலை அவதானித்தவாறு தாயின் அருகில் அமர்ந்தான் ஜோன்சன். பற்றிக் அன்ரனியின் கண்ணீர் கிறேசின் நெற்றியை நனைத்தது. "இஞ்சே! மகள், நாமெல்லாம் வீடு வாசல் இழந்து அகதியாக வாழுறம். இப்படியான நிலையில் தான் நம்மோட யேசு சுவாமியும் பிறந்தவர். அவர் பிறக்கைக்குள்ள எப்படி இருந்ததோ, அப்படித்தான் அவரின்ர பிறந்த நாளையும் நாம கொண்டாட வேணும். அதனால் தான் உங்களுக்கு புதுச் சட்டை இல்லை" என்று அன்ரனி கூறி முடிக்குமுன் "கிறேஸ்! ஜோன்சன்!" என்ற சரஸ்வதியின் தாயின் குரல் கேட்டது.. இருவரும் ஓடிச் சென்று பாட்டியை அணைத்தார்கள்.

'இந்தாங்க புதுச்சட்டை. இதை நான் வாற தைப்பொங்கலுக்காக உங்களுக்கு வாங்கினனன். ஆனா இண்டைக்கில்லாத புதுச்சட்டை பிறகு எதற்கு? தைப்பொங்கலுக்கு புதுச்சட்டை வாங்கித் தரணுமெண்டு அம்மா அப்பாட்டை கேளுங்கோ" என்று பற்றிக் அன்ரனிக்கும், சரஸ்வதிக்கும் படக்கூடியவாறு கூறிவிட்டு பேரப் பிள்ளைகளிடம் புதுச்சட்டையைக் கொடுத்தார், சரஸ்வதியின் தாய்.

குதூகல மேலீட்டால் குதித்து ஓடிய ஜோன்சனையும் கிறேசையும் நோக்கிய பற்றிக் அன்ரனியின் வாய் முணுமுணுத்தது.

ஈடு செய்ய முடியாத அனர்த்தங்களை கடந்த கால வன்செயல்கள் உண்டாக்கியது என்னவோ உண்மைதான். ஆனால் அதைவிட மேலான சக்தியும் அதற்கு உண்டு. அதுதான் மதத் தடைகளை உடைத்து இணைத்து வைக்கும் வல்லமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குருமாருக்கு"

"வாசலிலே ஒருதரும் நிற்கவேண்டாம். உள்ளுக்குப் போங்கோ. மற்றவர்களும் போகவேண்டும். இதுதான் கடைசி பஸ். அதுக்குப்பிறகு சென்றியால விடமாட்டான்கள். நல்லா உள்ளுக்குள்ள போங்கோ' ஓடிவந்து பஸ்சுக்குள் ஏறியவர்களுக்கு ஆலோசனை வழங்கியவாறு ரிக்கட்டை உடைத்து கொடுத்துக் கொண்டிருந்தேன்.

றைவர் பத்தினியனும் பஸ்சை ஸ்ராட்டில் வைத்துக்கொண்டு முன்னுக்கும் பின்னுக்கும் இழுத்து தனது அவசரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். பிரயாணிகள் ஏறி விட்டனர். "ரைட்" கூறி மணியடிக்க ஆயத்தமானேன். அவ்வேளை சிறுவன் ஒருவன் ஓடிவந்து "அண்ணே உங்களை அந்த அம்மா வரட்டாம்" என்று கூறிவிட்டு பதிலுக்கு காத்திராமல் ஓடுகிறான்.

அவன் காட்டிய திசை நோக்குகிறேன். 'அட.... நம்மட பஸ் டிப்போ பெரியவர்ர மனைவி பிள்ளைகள். பறக்கிறேன் அவ்விடத்துக்கு. "என்னம்மா போகத்தானே" என்று எட்டாக வளைந்து கேட்கிறேன். புது அப்போயின்மென்ற் அல்லவா நான் பந்தம் பிடித்துத்தான் ஆக வேண்டும்' மனதிற்குள் எண்ணுகிறேன்.

'ஓம் ஓம், முன்சீற்றில இருக்கிறவங்களை எழுப்பிப் போட்டு கூப்பிடு. நாங்க வாறம்" என்றார் டிப்போ பெரியவரின் மனைவி.

தர்மசங்கடமான நிலை எனக்கு. பஸ்சை நோக்கி ஓடுகிறேன். முன் சீற்றிலை இருக்கிறவங்களை எப்படி எழும்பச் சொல்லுகிறது. எழும்பமுடியாது, என்று சண்டைக்கு வந்தால்... முதல் அடிவாங்கிறது நான்தான். வெருகலம்பதி முருகா... அம்மாவிற்கு சீற்கொடுக்காட்டி.... புது அப்பொயின்மென்ட்... வேலைக்கு சிக்கல்தான். ஆர்ர முகத்தில முளிச்சனோ? என்று மனதிக்குள் எண்ணியவாறு முன்சீட்டில் இருந்தவர்களுக்கு அருகில் செல்கிறேன். திடீரென ஒரு யோசனை உதிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைக்காரன் காலில் வீழ்ந்து விடுவது. மெதுவாக அவர்களின் கையைத் தொட்டு மற்றைய பயணிகளுக்குத் தெரியாதவாறு " அண்ண.... இது ஓங்கட கையில்ல, கால்லெண்டு நினைச்சிக்கிறன். எங்கட பஸ் பெரியவர்ர மனைவியாட்கள் வர்ராங்க. தயவு செய்து இந்தச் சீற்றை கொடுக்க மறுத்தீங்கள் என்றால்..... எண்ட வேலையை பறித்த ஆட்களா போஃவீங்க. அண்ண சீற்ற விடுங்க...."அழாக்குறையாக கெஞ்சுறேன். 'சரி சரி வரச்சொல்லுங்க" என்று அவர்கள் கூறியதும் உள்ளம் குளிர்ந்தது.

ஓடிச்சென்று அழைத்து வந்து முன்சீற்றில் அமர்த்துகிறேன். நான் சுமந்து வந்த அவர்களின் சாமான்களை பத்திரமாக றைவர் சீற்றின் அருகில் வைத்துவிட்டு"றைட் றைட்" எடு பத்தினி அண்ண" என்கிறேன்.

பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. "ரிக்கற் எடுக்காதவை எடுத்துக் கொள்ளுங்கோ" ஓர் அறைகூவல். பெரியவரின் மனைவியை நோக்கி அம்மா எல்லாம் வசதிதானே?' சிறு பந்தம் "ம்" என அலட்சியமான பதில்.

'என்னவாய் இருந்தாலும், ஐயாட்ட போய் என்னைப்பற்றி நல்லா சொல்லுவா" நம்பிக்கையாக மனம் சொல்லியது. ஆஸ்பத்திரியை தாண்டி 'பன்சலை' சந்தியில் பஸ் நிற்கிறது. இரண்டு மஞ்சளாடை..... மதகுருமார்..... விறுவிறு என்று பஸ்சுக்குள் ஏறுகின்றனர். "நக்கின்ட..... நக்கின்ட...... (எழும்புங்க...... எழும்புங்க) இரண்டாம் கதையின்றி பெரியவரின் அம்மா பயம் கலந்த புன்னகையை உதிர்த்துவிட்டு வேகமாக சீட்டை காலி பண்ணுகிறார்.

இந்நிலையைக் கண்டும் காணாதது போல மறுபக்கம் திரும்புகிறேன். "எங்களை எழும்பச் சொல்ல உனக்கும் அந்த அம்மாவுக்கும் வீரம்வருப் எங்க பாப்பம் இவையள சொல்லட்டும் பாப்பம்." முதன் முதலில் சீற் பிடித்தவரின் ஆக்ரோசமான குரல் அது.

அதை என் உள்ளம் வெகுவாக ஆமோதித்தது. வெளியில் கூறமுடியாது. புது அப்பொயின்மன்ட்.

"றை... றைட்... பத்தினியண்ண எடு .. எடு... சென்ரியால கெதியாட் போகவேணும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியும் இந்த..........

வானொலியில் காலைச் செய்தியை வெகு உன்னிப்பாக கேட்டபடி சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார் பரமசிவம். செய்தி முடிந்தாலும் அவர் சிந்தனை மட்டும் எதையோ நோக்கி வட்டமிட்ட வண்ணம் இருந்தது. சுயநல சிந்தனைதான்.

நாற்காலியை விட்டு மெதுவாக எழுந்து கிணற்றடி பொது வேலி ஓரத்தில் நின்ற வேம்பில் தனக்கு அளவான குச்சு ஒன்றை ஒடித்து பல் துலக்கியவாறு மறு தெருக்கோடியில் இருக்கும் வள்ளுவனின் சில்லரைக் கடையை நோக்கி நடந்தார் பரமசிவம்.

கடைக்காரன் வள்ளுவனுக்கு பெரும் ஆச்சரியம். பரமசிவத்தார் பத்திரிகை பார்ப்பது குறைவு. அப்படிப் பார்ப்பதென்றால் ஓசியிலேதான். இன்று.....

இது என்ன மாற்றமோ..... புதிராக இருந்தது–அவனுக்கு.

பரமசிவம் வயதுக்கு வந்த மூன்று பிள்ளைகளின் தந்தை. பண்பான மனைவி கண்மணி. மூன்று வீடுகளுக்கு உரிமையாளர். வட்டியாலும் வாடகையாலும் வாழும் ஓர் ஓய்வூதியக்காரர். இவைகளால் எப்போதும் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ நினைப்பவர்.

சாய்வு நாற்காலியில் சற்று வளைந்து உட்கார்ந்தபடி பரமசிவம் அவசர அவசரமாக வள்ளுவன் கடையில் வாங்கிய பத்திரிகையை நுனிப் புல் மேய்வது போல் மேலோட்டமாகப் பார்த்தார். தான் எதிர்பார்த்த செய்தியை கண்டதும் அவர் பார்வை நிலைக்குத்தியது. பத்திரிகையை விரைவாக படித்தார்.

தொடர்ந்து யுத்தம்.

பணியும் வரை நிறுத்தப் போவதில்லை–அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சொல்லாக ஆதி இருந்து அந்தம் வரை மனனஞ் செய்வது போல் படித்து முடித்தார் பரமசிவம். முகத்தில் ஒரு போதும் இல்லாத செழிப்பு. நிம்மதியான பெருமூச்சு.

கதிரையின் கீழ் இருந்த குறை கோடா சுருட்டை எடுத்து பற்ற வைத்து மெதுவாக சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் பரமசிவத்தார்.

"என்னங்க, நானும் தான் கவனிச்சிட்டு வாரன். நம்ம நாட்டில நடக்கிற யுத்தம் பற்றி நீங்க அதிகமாக யோசிக்கிறீங்க. என்னெண்டு தான் சொல்லுங்கள்" என்றவாறு அருகில் இருந்த குட்டிக் கதிரையை இழுத்து அதில் அமர்ந்தாள் பரமசிவத்தாரின் மனைவி கண்மணி.

சிறிய புன்னகையை உதித்தவாறு பரமசிவம் "உனக்கென்ன தெரியும் இந்த யுத்தத்தின்ரை அருமை? மா புளிக்கிறது அப்பத்துக்கு நல்லதல்லா?"

ஒண்டும் விளங்கல்ல' என்றார் அவர் மனைவி கண்மனி.

"அடியே மட மண்டு" வெறுப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்த கண்மணியின் இதயத்தில் கணவனின் வெளிப்பாடு ஈட்டியால் குத்துவது போல் இருந்தது. தன் அபிப்பிராயம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை உணர்ந்து மௌனியானாள்.

தொடர்ந்தார் பரமசிவத்தார் "நம்மட மற்ற வீட்டில் இருக்கிறவங்களையும் ஏதாவது சாட்டுச் சொல்லி எழுப்ப வேண்டும். அவையள் தந்த அட்வான்ஸ்சும் காணாது. மூன்று வரிசமா இருக்கினம். வாடகையும் கூட்டித்தராயினம். பேப்பர் சொல்லுறதைப் பார்த்தா அவங்களை கெதியா வீட்டைவிடச் சொல்ல வேணும்"

"ஏனங்க.... இப்படி ஏன் திட்டம் போடுறீங்க" என்றாள் கண்மணி வெறுப்பும், சஞ்சலமும் கலந்தவாறு.

'உனக்கென்ன விளங்கும் கண்மணி. எல்லாம் நம்ம குடும்ப நன்மைக்குத்தான் நடக்குது. இந்த யுத்தம் முடியறதுக்குள்ள நம்மட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு பிள்ளைகளையும் கனடாவுக்கு அனுப்பிட வேணும்"

"அது எப்படிங்க முடியும்" என்றாள் கண்மணி.

எக்காளமிட்ட சிரிப்புடன் "அதுதான் அகதிகள் எண்டு அனுப்புறதுதானே" என்றார் பரமசிவம்.

'யாரோ பிள்ளைபெற யாரோ காயம் திண்ட கதைதான்' என்று எண்ணியபடி கண்மணி பரமசிவத்தின் கைகளில் இருந்த பத்திரிகையின் தலைப்பை பார்த்தாள்.

தொடர்ந்து யுத்தப்

பணியும் வரை நிறுத்தப் போவதில்லை-அரசு.

இந்த வாசகங்கள் கண்மணியின் இரத்தத்துடன் கலந்து ஓர் புதுவித உணர்வை உண்டாக்கியது-அவளுக்கு அது தணியாத உணர்வு-

●●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் எங்கே

இரவு சுமார் ஏழு மணியிருக்கும்.

திடீரென கோவிந்தன்–புஸ்பாவின் ஆறுமாதக் குழந்தை வீரிட்டு அழத் தொடங்கியது. இருவரும் செய்வதறியாது பதறிக்கொண்டிருந்தனர். நேரமும் இரவு! "சென்றி"களால் தாண்டி எவ்வாறு வைத்தியசாலைக்கு பிள்ளையை கொண்டு செல்வது என்பது பற்றி தீவிரமாக கோவிந்தன் யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்னங்க! புள்ள கத்திறது காதில் விழல்லையா?" என்று ஆத்திரத்துடன் கணவன் கோவிந்தனில் பாய்ந்தாள் புஸ்பா. சிந்திக்க இடமில்லை. கூச்சலிட்டு அழும் குழந்தையுடன் புஸ்பாவை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பறந்தான் கோவிந்தன்.

வைத்தியசாலையில் குழந்தையின் அழுகுரல் நாலா பக்கமும் எதிரொலித்த வண்ணம் இருந்தது. ஆனால் வெளிநோயாளர் பகுதியில் ஒரு வைத்தியசாலை ஊழியரும் இல்லை. கோவிந்தனும் புஸ்பாவும் குழந்தையுடன் ஒவ்வொரு அறையாக பார்த்துத் திரிந்தனர். அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது–வியாழக்கிழமை அன்று! இரவு ஏழு மணி தொடங்கி ஏழரை மணி வரை தொலைக்காட்சியில் "விஸ்வாமித்திரர்" படம் நடைபெறுவதும், அது முடியும்வரை வைத்தியசாலை பணிகள் இடைநிறுத்தப் படுவதும்!

ஒரு மாதிரியாக 'விஸ்வாமித்திரர்' விமர்சனத்துடன் டாக்டர் அம்மா வெளியில் வந்து கோவிந்தனின் பிள்ளையை வேண்டா வெறுப்புடன் சோதித்துவிட்டு வாட்டில் அனுமதிக்க உத்தரவு கொடுத்தார்.

விடிந்தும் விடியாத காலைப்பொழுது! கையில் தேனீர் போத்தலுடன் கோவிந்தன் 'வாட்டிற்கு ஓடினான். குழந்தை அழுத களைப்புடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. "என்ன புஸ்பா! டொக்டர் புள்ளைய பார்த்தாங்களா?" என்று கேட்டான் கோவிந்தன்.

"இல்லீங்க! ஒருவரும் பார்க்கல்ல" என்றாள் சோகத்துடன் புஸ்பா.

"சரி–சரி.... காலையில் டொக்டர் வருவார். விபரமாக என்னண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்" என்ற கோவிந்தன் வைத்தியசாலையை விட்டு நகர்ந்து, தன் மேசன் வேலை செய்யும் இடத்திற்குச் சென்றான். பிள்ளையை வைத்தியசாலை சென்று பார்க்க முடியாத அளவு கோவிந்தனுக்கு கட்டிட 'கொங்கீறீட்' வேலை தடுத்து விட்டது.

மாலை ஐந்து மணி! கோவிந்தன் ஓட்டமும் நடையுமாக வைத்தியசாலை வாட்டிற்குள் சென்றான். தனது குழந்தையின் கட்டிலைச் சுற்றி சிலர் நின்றிருந்தனர். புஸ்பா தலையில் அடித்து அழுது கொண்டிருந்தாள். கோவிந்தனுக்கு முழுவதும் புரிந்துவிட்டது. "ஐயோ! இஞ்ச பாருங்கோ! நம்ம செல்வம் செத்துப் போச்சு" என்று கோவிந்தனைத் தாவி கட்டிப்பிடித்து அழுதாள் புஸ்பா.

உலகமே இருண்டு வந்தது கோவிந்தனுக்கு! "ஐயோ இது வரைக்கும் ஒரு டொக்டரும் வந்து பாக்கல்ல. சேர்ஜனும் லீவாம். என்ட பிள்ளையை இந்த ஆஸ்பத்திரி தான் கொன்டது" என்று பலத்த சத்தத்துடன் கத்தினாள் புஸ்பா.

கோவிந்தனால் எதுவுமே செய்ய முடியாத நிலை. ஆனால் ஒன்றுமட்டும் அவன் மனம் உறுதியாகக் கூறியது!

இங்குள்ள டாக்டர்கள் அனைவரும் சட்டப்படி "தூக்கில் இடப்படவேண்டியவர்கள்!"

புஸ்பாவின் ஓலம் ஓயவில்லை. அதுவும் வைத்தியர்களுக்கு எதிராக! மெதுவாக இறந்த தன் பிள்ளையை கையில் ஏந்தினான் கோவிந்தன்! அவ்வேளை பக்கத்து கட்டிலில் இருந்த அனுபவம் மிக்க பெண் ஒருவர் கூறியது கோவிந்தன் காதில் தெளிவாகக் கேட்டது.

"டொக்டர்மார் எல்லாம் 'பிரைவட்'றாக வைத்தியம் செய்யத் தொடங்கி நல்லா உழைச்சிக் கண்டிட்டினம். ஆஸ்பத்திரியை கவனிக்கிறதே இல்லை. இப்படியான ஏழைகளுக்கு இதுதான் கதி.

கையில் உள்ள பிணக் குழந்தையுடன் அப் பெண்ணை ஒரு பார்வை பார்த்தான். "உண்மை" என்று மனம் கூறியது.

தினமுரசு (செப்டம்பர் 95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவில் எண்ண............

**பிரகாஷ் ஜுவலர்ஸ்**

**321, நீதிமன்ற வீதி,**

**திருகோணமலை.** தொ. பே:22852

என்றும் மாற்றுக்குன்றா தரமான

தங்க நகை விற்பனையாளர்கள்

பார்வையற்றோர் பலர்

பாரினில் இருக்கையில்

பார்வையுள்ள நாம்

பார்க்காதிருந்திடலாகா எனும்

நேர்மிகு நோக்கினிலே

நிகழ்த்தும் இப்பணி

சீரும் சிறப்புமாக

வளர வாழ்த்துகிறோம்

டோவர் ஏஜென்சி.

78, 80, பிரதான வீதி.

திருகோணமலை.

**பன்நெடுங்காலமாய் நம்பகமான மொத்த, சில்லறை (நுகர்வு) விற்பனையாளர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்

டாண் என்று 12 மணி அடித்தது தான் தாமதம். அலுவலக வேலைகள் எல்லாம் முடித்துவிட்டு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மதிய உணவுக்காக புறப்பட்டான் சிவலிங்கம். ஆவணியோடு புரட்டாதி கலந்த காலம். உச்சி வெயில் அவன் பாதி மொட்டையைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தது வெளியில் அரச உத்தியோகம் என்று சம்பளத்தை நான்கு நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியாத கௌரவ ஏழை. காதலித்து மணம் செய்துகொண்டதால் சீதனப் பாக்கியத்தை இழந்தவன். அவன் தனி உழைப்பிலேயே காலத்தைத் தள்ளும் மூன்று பிள்ளைகளும் மனைவியும் கொண்ட குடும்பம்....

இந்த நிலையில் காணி வாங்கி வீடு கட்டுவதென்பது கனவிலும் எண்ண முடியாதது. இந்தக் காரணம்தான் உவர்மலையில் அத்துமீறி ஒரு பெரியவரின் காணியைப் பிடிக்க வேண்டியிருந்தது.

உவர்மலை ஏற்றத்தில் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தான் சிவலிங்கம். இன்னும் கொஞ்சத் தூரம்தான் வீட்டிற்கு. வேத்தை அதிகரித்தான் மீண்டும் ஒன்றரை மணிக்குள் அலுவலகத்தில் நிற்க வேண்டும். உண்ட பாதி உண்ணாப்பாதியாக ஓட வேண்டும். உச்சி வெப்பம் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது. இந்த வெப்பத்தில் அவன் மூளை இம்மாத சம்பள பட்ஜெட்டை நெறிப்படுத்திக் கொண்டிருந்தது. இம் முறையாவது மனைவிக்கு ஒரு சேலை எடுத்தாக வேண்டும். வசதியானால் அதே பிடவைக் கடையில் பிள்ளைகளுக்கும் எனக்கும் உடுப்பெடுக்க வேண்டும். அரை வாசிக்கு பணம் கொடுத்து மிகுதிக்கு வரும் மாத சம்பளத்தைக் காட்டலாம். சம்பளத்துடன் சமாளிப்பது என்பது முடியாத காரியந்தான். என்னைப் போல் நடுத்தர அரச ஊழியன் அதுவும் ஒத்த உழைப்புக்காரன்...... முடியாது! அப்படி எவனாவது வாழ்ந்து காட்டினால்.... அதை கின்னஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தில் எழுதி நோபல் பரிசும் வழங்கலாம்.

எப்படித்தான் பட்ஜெட் போட்டாலும் துண்டு விழும் தொகை அதிகரித்த வண்ணமே இருந்தது - சிவலிங்கத்தின் சம்பளத்தில்!

மெதுவாகப் படலையைத் திறந்து கொண்டு நுழைந்தான் சிவலிங்கம். எப்படி மெதுவாக திறந்தாலும் வருகையை வீட்டில் உள்ளவருக்கு அறிவிக்க இந்த உடைந்த தகர கேட் மறுப்பதே இல்லை.

சைக்கிளைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். மேசையில் சாப்பாடு ஆயத்தமாக இருந்தது. கையை கழுவிவிட்டு சாப்பாட்டிற்கு முன்னால் அமர்ந்தான். "இஞ்சேருங்க மூண்டு காட் வந்திருக்கு" என்று கூறியவாறு கடிதங்களை சிவலிங்கத்திடம் நீட்டினாள் அவன் மனைவி. அந்த அழைப்பிதழ் மடல்களை பார்த்ததும் தலை சுற்றியது சிவலிங்கத்திற்கு. அவன் பட்ஜெட் கோட்டை சரிந்து கொண்டிருந்தது.

இரண்டு திருமண வீடுகள் ஒரு பிறந்த நாள் வீடு. அவன் அரச ஊழியனல்லவா? கட்டாயம் அவைகளுக்கு போய்த்தான் ஆக வேண்டும். காட்டைக் கொடுத்து சிவலிங்கத்தின் மூட்டைக் குழப்பிவிட்டாள் அவன் மனைவி. நாடியில் கையைக் கொடுத்து, சிந்தித்த வண்ணம் இருந்த சிவலிங்கத்திடம் "ஒரு மணியாகுது.... இன்னும் சாப்பிடாம என்ன யோசிக்கிறீங்க" என்றாள் மனைவி.

"ஒன்று மில்லை கல்யாண வீட்டிற்குப் போவதென்றால் காசுப் போட்வேண்டும் நல்ல உடுப்பும் வேணும்" என்றவாறு இரண்டுவாய் சோற்றை அள்ளி எறிந்துவிட்டு வேலைக்கு கிளம்பினான் சிவலிங்கம். பட்ஜெட்டை எண்ணப் பசி பறந்துவிட்டது.

சைக்கிளை மெதுவாகத் தள்ளி படலை வரைக்கும் வந்த சிவலிங்கம் ஏனோ மீண்டும் ஒரு தடவை அந்த அழைப்பிதழ்களைப் பார்க்க வேண்டும் என ஆவல் தூண்டியதால் சைக்கிளை படலையில் சாத்திவிட்டு வந்து அழைப்பிதழ்களை பார்த்தான். அவன் எதிர்பார்த்தற்கு மாறாக இருந்தது. வைபவம் இரண்டு மணிக்குப் பின்னர்தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானச் சாப்பாடு என்றாலும் இலாபமாக இருக்கும் என எண்ணிய அவனுக்கு ஏமாற்றம். இரண்டும் கெட்ட நிலை இப்பொழுது அவனது சைக்கிள் அலுவலகத்தை நோக்கி மிக வேகமாகச் சென்றது.

எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் அவனது சைக்கிளுக்கு புதிய வேகத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இவைகளை எல்லாம் எப்படி மற்றவர்களுக்கு புரிய வைப்பது? சிந்தித்துக் கொண்டே அலுவலகத்தை அடைந்தான் சிவலிங்கம். இந்த நிகழ்வை உடனடியாக ஒரு கதையாக எழுதி ஓர் ஜனரஞ்சக பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு இன்றுவரை காத்துக் கொண்டிருக்கின்றான் . அந்த பாதிப்படைந்த சிவலிங்கம்.

(தினமுரசில் வெளியாகியுள்ளது)


இழை கொண்டு சமூகத்தை பின்னிப்பார்!

அது இனிதான நூல் என்று பெயர் சூடும்!

வாழ்த்துகிறோம் சிறப்புற......

**சலூன் டி லக்ஸ்**

இல. 8, மூர் வீதி,

திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதை தெரியாத பயணங்கள்

"எடி! புள்ள சுபா! இது என்ன முடிவு? நல்லா யோசித்துத் தான் எடுத்தனியா? இஞ்ச என்ன அம்மா அப்பா செத்துப் போயிட்டாங்க எண்டு நெனச்சிட்டியோ?"

என்று தலையில் அடித்த வண்ணம் அம்மா பாக்கியம் கதறினார். இவற்றை எல்லாம் பெரிதாக காதில் போட்டுக் கொள்ளாதவன் போல் காலை தேனீரை உறிஞ்சிக் குடித்துவிட்டு எழும்பி முற்றம் கூட்டுவதற்காக விளக்குமாறைக் கையில் எடுத்தாள் ஆசிரியையான சுபாஷினி.

"நான் கத்திறன்! காது என்ன செவிடா உனக்கு? வயது கூட இருபத்தஞ்சி முடியல்ல உனக்கு! அதுக்குள்ள கலியாணத்துக்கு அவதிப்பட்டுறே. ஒண்ட வயசுக்கு ஒத்தாப் போல மாப்பிள்ளை எண்டாலும் பரவாயில்லை. நாப்பத்தியாறு வயசு கிழட்டு மாப்பிள்ளை. என்னைவிட ஒரு அஞ்சு ஆறு வயசுதான் கொறைய இருக்கும். அடியே! வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டால் காசுக்கு கொறை இல்லை எண்டு நெனச்சுத்தானே 'ஓம்' என்ட நீ!" என்று இடியாய் முழங்கினாள் பாக்கியம்.

அம்மாவின் இரைச்சலை விட முற்றம் கூட்டும் இரைச்சலை வேகமாக அதிகரித்தாள் சுபா.

தன் கடமைகளை அவசர அவசரமாக செய்து முடித்துவிட்டு 7 மணிக்கு முன்னமே பாடசாலைக்கு கிளம்ப ஆயத்தமானாள். அதற்கு மின்வெட்டும் அதனால் மேலதிகமாக அரசால் அதிகரித்திருக்கும் ஒரு மணித்தியால நேரமும், அம்மாவின் 'செல்' அடியில் இருந்து விடுதலை பெற உதவியது சுபாவிற்கு!

சதாசிவம்! சுபாவின் தகப்பன்! அந்த கிராமத்து போடியார். ஏறக்குறைய ஐம்பது ஏக்கர் நில வேளாண்மைக்காரர். கொடிகட்டி வாழ்ந்தவர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சுமந்த வன்முறைகளால் தன் வேளாண்மைத் தொழிலை மட்டுமன்றி தலைவர் பதவியைக் கூட கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. எம் நாட்டு வன்முறைகளுக்கு அபார சக்திகள்! போடியார் சதாசிவத்தின் இரு புதல்வர்களையும் "எங்கோ" துரத்திவிட்டது. இப்போ என்னவோ! சுபாவின் வருமானம் தான் அவரின் குடும்ப வருமானம். பலவிதமாகவும் தாக்கமடைந்த சதாசிவம், எதிலும் பற்றுமின்றி, பெரிதாக பணமும் இன்றி நடைப்பிணமாக காலத்தை கடத்திக் கொண்டிருந்தார்.

***

மரணவீடு முடிந்து எட்டாவது நாளை நெருங்கிக் கொண்டிருந்தது. கிராமத்து செத்த வீடு! அதுவும் போடியார் சதாசிவத்தாரின் செத்த வீடு. சனங்கள் குறையவே குறையாது.

கடந்தவைகளை மீட்டியவாறு வற்றிய கண்களுடன் வாசலில் அமர்ந்திருந்தார் சதாசிவத்தின் மனைவி பாக்கியம். எப்படி எல்லாம் கலகலப்பாக வாழ்ந்த வீடு! ஆறுதலுக்கோ அழகுக்கோ ஒரு பெத்த பிள்ளை இல்லை. ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களோ? மரணித்து விட்டார்களோ? விபரம் விளங்காத நிலை.

வாசலில் தபால்காரரின் மணியோசை அவளது மீட்டிய நினைவுகளை திசை திருப்பியது.

கனடா கடிதம் மகள் சுபாவின்றது. தன்னையும் அறியாது பாக்கியத்தின் உதடுகள் உச்சரித்தது.

உகந்த நேரத்தில் வந்த கடிதம் அது.

ஆத்ம திருப்தியை அளித்துக் கொண்டிருந்தது.

அன்பு மிக்க அம்மா!

மகள் சுபா எழுதிக் கொள்வது. ஏதோ நாம் நலம். அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமாகுக. திருமணத்திற்கு நான் அவசரப்பட்டதும், முழுமையையுப் பாராது வெளிநாட்டு மாப்பிள்ளையை தெரிவு செய்ததும் உனக்குப் புரியாது. அப்பாவிற்கு ஏற்பட்ட சிறுநீரக வியாதியும், அதனை மாற்றீடு செய்வதால்தான் அவரைக் காப்பாற்ற முடியும் என்பதை அறிந்த நாள் தொடங்கி நிம்மதியற்று இருந்தேன். அப்பா எப்படியெல்லாம் எங்களை வளர்த்தார். அதை எண்ணினேன். அது தான் அந்த என் திருமணம்.

நானாகவே எடுத்த முடிவு.ஓர் நல்ல தகப்பன் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என எண்ணும் ஓர் சராசரி பெண் நான். ஏதோ என் கணவர் முதுமையானவர்தான். தாரமிழந்தவர்தான். மறுக்கவில்லை. இவைகள் தான் என் தந்தையின் சிறுநீரக மாற்றத்திற்கு அனுகூலமானவைகள். எந்தவித முகச்சுழிப்பின்றி அப்பா சுகமடைய பணம் அனுப்பினாரே! அவ்வழியில் எனக்குக் கிடைத்த கணவரை பெருமையாகக் கொள்கிறேன், அம்மா!

அப்பாவின் மரணத்தின் வேளை உன் பிள்ளைகள் ஒருவரும் இல்லை என்று ஏங்கியிருப்பாய். என்ன செய்வது. ஆண் பிள்ளைகள் நாட்டில் இருந்தும் வீட்டிற்கு வர முடியாத நிலை. இந்நிலையைச் காணும் போது "பிறந்திருக்கக் கூடாது" என்பது மட்டும் முடிவாக வரும். வாய்விட்டு அழுகிறேன். இப்போதைக்கு அதுதான் முடியும். விதியைப் பார்த்தாயா அம்மா.....?

முழக்கமிட்டு வந்த வெடி மழையிலிருந்து காப்பாற்றுவதற்காக அவசரப்பட்டு அப்பாவை அந்த மாட்டு வண்டியிலேற்றி முன்னமே போய் சேரட்டும் என்று அனுப்பி வைத்தாயே.... "செல்" உருவில் வந்த யமன் அப்பாவோடு சேர்ந்து மற்றவர்களையும் கொண்டு சென்றானே. முன்னமே சேரட்டும் என அனுப்பிய அப்பா முன்னமே சேர்ந்து விட்டார்"

தீராது என எண்ணிய சிறுநீரக நோய் அப்பாவிற்கு தீர்ந்துவிட்டது. ஆனால் அப்பாவால் உயிர் வாழ முடியவில்லை. எம் நாட்டு நிலை.

எப்படியெல்லாம் நீ தவித்திருப்பாய். உணருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே சுகமடையா இந்த.... எம் நாட்டின் இந்த நோய். எம்போன்று எத்தனையோ ஜீவன்கள் பாதை தெரியாது பயணம் செய்கிறார்கள்.

அம்மா......

இறுதியாக ஒன்று. இந்த நிகழ்வுகள் எம் குடும்பத்திற்கு மட்டுமல்ல. உன் கணவனைப் போன்று எத்தனையோ பேர்கள். உன் பிள்ளைகள் போன்று எத்தனையோ பிள்ளைகள். ஆறுதல் அடைந்து கொள்.

முடிக்கிறேன்.

இப்படிக்கு

பிரிவில் துயருறும் மகள்,

சுபா.

கண்களை விட பாக்கியத்தின் இதயம் தான் அழுதது.... கனத்தது.... "என்றுமே சுகமடையா" என்ற மகளின் கடிதவரிகள் அவள் திரும்பும் திசையெல்லாம் எதிரொலித்தது. அவளை கொந்தளிக்கவும் வைத்தது.

A-KUGHAN
72.2nd LANE
ANANDA PURI
TRENCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

அந்த ஆலமர நிழலையும் தாண்டி "கியூ" நீண்டிருந்தது. மல்லிகைத்தீவு கிராமத்தின் சக்தி மிகு சிவன் ஆலயம் தற்போது பாதுகாப்புப் படையினரின் பாசறை! அதற்கு முன்னால் தான் அந்த சடைத்த ஆலமரம் உண்டு. அக்கிராமத்தார்கள் கிராமத்தை விட்டு வெளியில் செல்வதாயின் பாதுகாப்பு படையினரின் "பாஸ்" பெற வேண்டும். அதற்காக நின்ற அந்த "கியூ"வில் இணைகிறேன் நான். கையில் "பைல்"லுடன்!

என் முன்னால் கந்தசாமி அத்தானும் பின்னால் மணி அக்காச்சியும் நிற்கிறார்கள். நேரமும் போய் கொண்டிருக்கிறது. "கியூ"வும் வேகமாக நகர்ந்தபாடில்ல. மெதுவாக கந்தசாமி அத்தானிடம் கதை கொடுக்கிறேன். "அத்தான்! இண்டைக்கு இரண்டு மணிக்கு திருக்கோணமலையில் வாத்தி வேலைக்கு இன்ரவியூ. அதுதான் கொஞ்சம் அவசரமாகப் போகவேணும் கொஞ்சம் முன்னுக்கு விடுவியோ?" என்று கூறி பதிலுக்கு காத்திருந்தேன்.

"அட! இன்ரவியூக்கா போறாய்! நேரத்தோட சொல்லாமே. இஞ்ச பாருங்கோ முன்னுக்கு நிற்கிறவங்க கொஞ்சம் இடம் கொடுங்க. நம்ம பயல் வாத்தி இன்ரவியூக்கு போப்போறான். நாளைக்கு வாத்தியாரானால் நம்ம பள்ளிலதானே படிப்பிப்பான். இதற்கு முன் வாத்தி எத்தனை பேர் வந்து தங்கட வேலை முடிஞ்சவுடன் மாறித்தானுகல். இது நம்மட புள்ள! ஆ.... விடுங்க..... விடுங்க....." என்ற புரட்சிகர சொற்பொழிவுடன் "கியூ"வை உடைத்து முன்னுக்கு போகவிட்டார் கந்தசாமி அத்தான்.

கல்விக்கந்தோர் முன் வாசல் இருந்த கதிரையில் இன்ரவியூக்கா வந்தவர்களுடன் அமர்கிறேன். இலக்கமும் பெயரும் கூறி அழைக்கப்படுகிறார்கள். எனது முறை வரும்வரை என் கையில் இருந்த "பைலை" தட்டிப் பார்க்கிறேன் 'நேற்று வரை இந்த ஆவணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்ட என்ன பாடுபட்டேன். நல்ல வேளை தலைமை ஆசிரியர் நீக்கொலாஸ் ஐயா பரீட்சைப் பெறுபேறுகளை பத்திரப்படுத்தாவிடின் அதுவும் அந்த வன்செயலில் எரிந்திருக்கும். 'பெரிய ஐயா'வுக்கு நன்றி' என்று மனதில் எண்ணிக் கொண்ட வேளை எனது பெயரும் இலக்கமும் அழைக்கப்படுகிறது. இதயத்தில் மகிழ்ச்சி பொங்க துள்ளி ஓடுகிறேன்.

எனது "பைலை" நேர்முகப் பரீட்சை நடத்தும் அதிகாரியிடம் கையளிக்கிறேன்.

"உமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எங்கே" என்றார் அதிகாரி!

"எரிந்துவிட்டது" என்றேன்

"உம்மட அம்மா அப்பாட சேட்டிபிக்கேற்றும் இல்லை' என்ன?" என்று தொடர்ந்தார் அதிகாரி. எனக்கு பொத்துக் கொண்டு வருகிறது கோபம். அடக்கிக் கொண்டு பவ்வியமாக "ஐயா! என்ர அடையாள அட்டையை தவிர சகலதும் வன்செயலில் எரிந்து போச்சு! ஆனா, இந்தாங்க அடையாள அட்டை! நீங்க கேட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் எல்லாம் கொடுத்துத்தான் இது எடுத்தது! இந்தாங்க! மற்றது என்ர பரீட்சைப் பெறுவேறுகள்! அது நான் குதிரை ஓடாம சொந்தமாய் எழுதி பாஸ் பண்ணியது" மழ மழவென பொழிந்து விட்டேன். அதிகாரி என்னை முறைத்துப் பார்த்துவிட்டு "பைலை" என்னிடம் நீட்டுகிறார். நிச்சயமாய் இந்த வேலை எனக்கு கிடைக்காது என்ற நம்பிக்கையுடன் எனது பையிலை வாங்குகிறேன்.

ஒன்று மட்டும் யதார்த்தமாக புரிந்தது எனக்கு!

"தகுதியானவர்களிடம் தேவையற்றவற்றை கேட்டுத் தகுதியற்ற தேவையானவர்களுக்கு பதவி வழங்க நடாத்தும் நாடகம் இது"

மெதுவாக அகல்கிறேன். வாசலில் இருந்த காந்திஜியின் படம்" "சத்தியம் வெல்லாது" என்று கூறிச் சிரிப்பது போல் இருந்தது எனக்கு!

தினமுரசு (ஒக்டோபர் 04 1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டு

நித்திரைப் பாயில் இருந்து கொண்டு அடம்பிடிக்கத் தொடங்கி விட்டான் செல்வத்தின் மூத்த மகன். கலை நிகழ்ச்சிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் உள் அடக்கிய சுதந்திரதின விழா இன்று! எவ்வளவுக்கு களியாட்ட விழாக்களை தவிர்க்க முடியுமோ தவிர்க்க வேண்டும் என செல்வத்தின் பய உணர்வு ஓலமிட்டாலும் நிலைமை விளங்காத பிஞ்சு உள்ளத்தின் உணர்வை கட்டுப்படுத்த அவன் எண்ணவில்லை.

மகனை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு விழாவிற்கு விரைந்தான் செல்வம். சைக்கிளில் ஓடிய தூரத்தை விட தள்ளிக் கொண்டு சென்ற தூரம் தான் அதிகம். அவ்வளவு சோதனை. அடையாள அட்டையைக் கையில் பிடித்த வண்ணமே நடை.... அடிக்கடி 'அந்த வேதனை'யை எண்ணி மகனைப் பார்த்து உறுமிக் கொண்டான். இப்போது சுதந்திரதின விழா ஒலி பெருக்கியில் சமாதான கீதம் கேட்கிறது. அண்மித்து விட்டதை மகன் தன் புன்சிரிப்பால் காட்டினான்.

சைக்கிளை தள்ளிக் கொண்டு சென்ற செல்வத்தை தடுத்து நிறுத்திய பாதுகாப்பாளர்கள், சைக்கிளை அவ்விடத்தில் நிறுத்திவிட்டு நடந்து செல்லுமாறு பணித்தார்கள். எவ்வளவு தூரம் விழா மைதானத்திற்கு நடக்க வேண்டும். அதுவும் பிஞ்சு மகனையும் கூட்டிக் கொண்டு. செல்வத்தின் மனம் அங்கலாய்த்தது. விழாவிற்கு செல்வதா? விடுவதா? தன் மகனுக்கு எப்படி புரிய வைப்பது? தீர்மானிக்க முடியாத நிலையில் மெதுவாகத் திரும்பினான்.

மூன்று சக்கர சைக்கிளில் இரு கால்களையும் இழந்தவர் இருந்தார். இன்று அங்கவீனர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்குவார்கள். புரிந்து கொண்ட செல்வம் மெதுவாக அந்த கால்களை இழந்தவரிடம் கதை கொடுத்தான். " "ஏன்! நீங்கள் போகலாம் தானே?" லேசாகச் சிரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே கூறினார் அவர். "எவ்வளவோ கூறியும் பாதுகாப்பாளர்கள் கேட்கிறார்களில்லை. அதுவும் நிலாவெளியில் தாக்கிய "செல்" வீச்சில் தான் எனது கால்கள் ஊனமானது என்ற வைத்திய அறிக்கையை காட்டியும் என்னை நடந்து போகும்படி கூறுகிறார்கள்! சீ....'விழாவிற்கு போவதற்கே சுதந்திரமில்லை...." என்று கூறிக் கொண்டு முச்சக்கர வண்டியை திருப்பிக் கொண்டு வேகமாக இடத்தை விட்டு அகன்றார்.

இவை அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த செல்வத்தின் மகன் "அப்பா! சுதந்திரதின விழா பார்த்தது போதும். வாங்க வீட்ட போவம், இப்படி விழா பார்க்கத் தேவையில்லை!"

'இந்த பிஞ்சுக்கே புரிகிறது! –இல்லை புரியவைக்கிறார்கள்!' என்று எண்ணியபடி சாத்தியிருந்த தனது சைக்கிளின் பூட்டைத் திறந்து கொண்டு சைக்கிளை தள்ளுகிறான்.

மீண்டும் ஒலிக்கும் அந்த சமாதான பாடல் துல்லியமாக கேட்கிறது. செல்வம் புன்னகைத்துக் கொள்கிறான். அதைக் கண்டு அவனது மகனும் புன்னகைக்கிறான்.

தினமுரசு (பெப்ரவரி–25 1996)

A. KUGAN
72. 2nd LANE
ANANDA PURI
TRINCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீரணம்

மாலை நேரக்குளிப்பு "ஜில்" என்று இதமாக இருந்தது. அத்தோடு மெதுவாக பயண அலுப்பும் விடுபட்டுக் கொண்டிருந்தது. சமார் எட்டு மணித்தியாலங்கள் பயணம்! உயரம் குறைந்த 'மினிபஸ்'. நிமிரவும் முடியாது! தூண்டல் ஊசிநிலை ஏதோ வந்து சேர்ந்துவிட்டோம். கொழும்பு கப்பித்தாவத்தை பிள்ளையார் ஆலய சத்திரம். அந்த சத்திரத்திற்கு ஓர் சரித்திரமே உண்டு. 1995ம் ஆண்டு காலங்களில்..... வெருகல் முருக ஆலய உற்சவகாலங்கள் போன்று நிறைந்த சனங்களுடன் காட்சியளிக்கும். அதாவது...

பூஸா தடுப்புமுகாம் இயங்கும் காலங்கள்! வட கிழக்கு மக்களின் 'பயங்கரவாத பல்கலைக்கழகம்' ஆக பிரகடனப்படுத்திய காலங்களில்! வயது பேதமின்றி அரசியல் செல்வாக்குமின்றி, சில அரசியல்வாதிகளின்.... அமைச்சர்களின் சுயலாபங்களுக்காய் தமிழ் பேசும் இனம் என்னும் அடிப்படைத் தகைமையை மட்டும் கொண்டு, இலவச அனுமதியுடன் இயங்கிய பல்கலைக்கழகம் அது!

அந்த பூஸா முகாமில் தான் என் தம்பி குணமும்-பஸீரின் தம்பி சமூனும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சமூன்! 1983 ம் ஆண்டுகளில் தொடங்கி 1985ம் ஆண்டு வரை! தோளில் ஒரு பையைப் போட்டுக் கொண்டு, ஓர் அமைப்பின் சார்பாக தமிழ் புனைப் பெயரில் தமிழ் பேசும் கிராமங்களில் பிரச்சார பணிகள் மேற் கொண்டிருந்தார். கல்வியும், கனிவான சுபாவமும், ஆழமான கருத்துச் செறிவும் அவரை மக்கள் மத்தியில் கண்ணியப்படுத்த காரணமாக அமைந்திருந்தது. இவைகளே பூஸா முகாமிற்கு சமூனை அள்ளிக் கொண்டு வரக் காரணமாயும் இருந்தது.

தோளில் கிடந்த துவாயால் மூன்று தடவைகள் நிலத்தை தட்டிவிட்டு அச்சத்திர மூலையில் நானும் பஸீரும் அமர்ந்தோம். அந்த சப்பாணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலி இருக்கையிலே உள்ள சுகம்.... அப்பப்பா... மனித இதயங்கள் எப்போதும் இயற்கை இன்பத்தைத்தான் சுகிக்க முனைகிறது. என்பது எவ்வளவு உண்மை!

"நாளைக்கு பூஸாக்குப் போக நேரத்தோட வெளிக்கிடனும். நேரத்தோட பஸ்சில சனம் குறைவாய் இருக்கும்." என்று கூறியவாறு ஈரம் உலராத தன் சுருள் கேசத்தை இருகரங்களாலும் தட்டிவிட்டுக் கொண்டான் பஸீர். "புது இடம், நித்திரையும் வராது" என்றவாறு பின் சுவரில் காலை நீட்டி சாய்ந்தவாறு கூறினேன்,

திடீரென.... கண்ணிவெடி முழங்கியது போல் ஓர் குரல்! "புதுசா வந்தவை ஐடன்டி காட்டை வந்து பதியுங்கோ! இரவிலே பொலிஸ் செக் பண்ணுவினம்", அது அந்த தர்மசத்திரத்தின் முதிர்ந்த முகாமையாளரின் குரல்.

அவர் கூறி முடிப்பதற்குள் அம்பு போல் சென்று அடையாள அட்டையை பதிந்து விட்டு மீண்டும் பஸீரோடு இணைந்தேன். தொடர்ந்து எம்மிடையே ஓர் சம்பாசணை! கொழும்பு மடத்தில் இருந்துகொண்டு சொந்த ஊரை மேய்ந்து கொண்டிருந்தோம். அனைத்தும் கலந்த சாம்பாறு சம்பாஷணை அது. சுவாரஸ்யமாக இருந்த எம்மிடையே சனியன் புகுந்தது போல் "தம்பி! உம்மட ஐடின்டிகாட் பதிவில ஊரை பார்த்தன். அதுதான் உங்கட ஊர் நிலவரம் என்னென்டு கேப்பம்" என்றவாறு எம்மோடு அமர்ந்து கொண்டார் அந்த தர்மசத்திர முகாமையாளர். 'இந்த நேரத்தில... இந்த அறுவை' என்று எண்ணிக் கொண்டேன். "என்ன தம்பிமாரே! உங்களின்ர ஊரில ஒரே பிரச்சனையாம், அதுவும் தமிழ்–முஸ்லிம் சண்டை முடியிறாப் போல இல்லை எண்டு கதைக்கினம். அப்பிடி என்ன? அவ்வளவுக்கு... வீரம் செத்தே போச்சு".... என்று வீர முழக்கமிட்டார் முகாமையாளர்:–பஸீரை இனம் காணாமல்! அவரின் கதையை திசைதிருப்ப முனைந்தேன். 'ஐயா! இந்த ரெண்டு கோயிலுக்கும் வழக்காமே! இரண்டும் நம்மட கோயில்! ஏன் சண்டை? ஒற்றுமையாக இருக்கலாமே" என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது தம்பி, உரிமையை விடலாமே" என்று மழுப்பிவிட்டு, விட்ட இடத்தில் இருந்து மீண்டும் முழங்கினார் முகாமையாளர். பஸீரை எந்தளவு தூரம் தாக்கும் என்பதை என்னால் உணரமுடியாமல் இல்லை.

பஸீரை இனம் காட்டினால்..... ஒரு வேளை வீர முழக்கம் அதிகரிக்கலாம் என எண்ணி மௌனமானேன்–மிக சங்கடமான நிலை எனக்கு!

ஆழியில் துரும்பு போல் தத்தளித்தேன். முகாமையாளரை கழற்றுவதற்கு வேறு வழியின்றி வேண்டுமென்றே கொட்டாவியை வரவழைத்துக் கொண்டு "பிரயாண அலுப்பு உடம்பை முறிக்குது" என்றபடி துவாயை விரித்து அதில் சரிந்தேன்.

"சரி! படுங்கோ! நாளைக்கு கதைப்பம்" என்றவாறு எழுந்து சென்றார் முகாமையாளர். படுத்திருந்தேன். இமைகள் மூடவில்லை. அதுபோல் எண்ணங்களும் மூடவில்லை.

பஸீருக்கும் எனக்கும் இடையில் இங்கிதம் தெரியாத முகாமையாளர்.... புரண்டு புரண்டு படுத்தேன். "என்ன நித்திரை வருதில்லையா?" பஸீரின் குரல் துல்லியமாக ஒலித்தது, அந்த இருளில்! "ம்...., புது இடம், நித்திரை வருதில்லைதான்" என்று பிறிதொரு காரணத்தை நியாயப்படுத்தினேன்.

"இஞ்சபார்! அந்த முகாமையாளர் கதைச்சதப்பத்தி ஒண்டும் யோசிக்காத! இது சகஜம். நம்மளால இந்த சந்தேகங்களையும், நோக்குகளையும், நிப்பாட்ட முடியாது. ஆனா ஒண்டு உண்மை! உனக்கும் எனக்கும் இடையிலே இவைகள் ஒரு போதும் விரிசலை உண்டு பண்ணாது. அது நிச்சயம். இத ஒவ்வொருவரும் உணரணும். சரி–சரி படுத்துக்கொள்! நாளைக்கு நேரத்தோடல்லவா பூஸாவுக்கு போகணும் நம்மட சமூகனையும், குணத்தையும் கண்டாத்தான் திண்டது செமிக்கும்" பஸீரின் இந்த வசனங்கள், என் இதயத்தில் கனத்திருந்த சுமையை ஜீரணமாக்கிக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படுமுன் பொறுங்கள்!

யார் இவர்



**இ**ளம் பராயம் தொடக்கம் கலை உணர்வும், இலக்கிய உணர்வும் சாதுரிய குணமும் நிறையப்பெற்ற என் இனிய நண்பர் கனகசபை தேவகடாட்சம்.

தனித்தமிழ் ஆதிக்கத்தை வாழ்க்கை முறையிலும்... எழுத்தாற்றலிலும் செயற்படுத்துபவர். இவைகளுக்கு இரு துணைகள். இவர் தந்தையார் பல ஆண்டுகளாக பாடசாலை அதிபராகவிருந்து பெற்ற அனுபவ முதிர்ச்சியினால் இவர் பக்குவப்பட்டவர். மற்றையது மல்லிகைத்தீவு என்னும் தமிழ் கிராமத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் அனுபவங்கள்.

கிராம சேவை உத்தியோகத்தர் என்ற பாரிய பொறுப்பில் இருந்தும் அதற்கு அப்பாற்பட்ட எழுத்துலகில் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதில் வெற்றியும் கண்டவர்.

இவரது படைப்புக்கள் அனைத்தும் தற்காலத்தில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் யதார்த்த உண்மைகளின் பிரதிபலிப்புக்கள். அதனால்தான் **'காலக்கிறல்கள்'** தொடர்ந்து வாழும்! பிரகாசித்துக் கொண்டிருக்கும்–என்பதில் ஐயமில்லை. ஆதரவு வழங்குவது எம் கடமை.

சமூக சமுதாய பணிகளில் மக்கள் நெஞ்சங்களில் குடி கொண்ட இவரின் படையல்கள் உன்னத நோக்கத்தின் அடிப்படையில் வெளியிடப்படுவதால் தொடர்ந்தும் நூல் உருவில் வெளிவர வேண்டுமென ஆவல் கொண்டு இறைவனின் நல்லாசிகளை வேண்டுகிறேன்.

**வாழ்க! வளர்க!**

**செ. நவசோதிராசா (புதுமை நெஞ்சங்கள் இலக்கியக்குழு சார்பாக)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org